# கிறிஸ்தோபகாரி.

# THE CHRISTIAN FRIEND.

4. சித்திரை மாதம், 1871.


## BRIEF SKETCH OF THE AMERICAN MISSION.

## இலங்கையிலுள்ள அமெரிக்கன் மிஷியோன் சரித்திரப் பொழிப்பு.

(தொடர்பு.)

௧௮௨௪ம் ௵ முற்கூறில் ஒவ்வொரு மிஷியோன் ஸ்தானத்திலுமுள்ள தருமப்பள்ளி மாணாக்கர் மாணாக்கிகள் மனதில் அதிக பயபக்தியும் ஆத்தும கவலையுந் தோன்றின. அவ்வாண்டு மாசிமாதத்திலேயே முதன்முதல் மார்க்க எழுப்புதல் உண்டுபட்டது.

பரிசுத்தாவியானவர் விசேஷமாகத் தெல்லிப்பழைத் தருமப்பள்ளி வாலிபருடைய இருதயங்களிற் தோற்றத்தக்கதாய்க் கிரியை செய்தார். அநேக வாலிபர் அவ்விடம் வாசம்பண்ணின மிஷியோனரியாகிய ஊட்வேட் ஐயரிடம் போய், ஐயரே, நாங்கள் இரட்சிக்கப்படுகிறதற்கு என்னசெய்யவேண்டுமென்று ஆவலிப்புடன் வினாவினார்கள். தனக்கு உதவிசெய்ய வரும்படி மற்றும் மிஷியோனரிமாரிடங் கேட்டுக்கொள்ளவே அவர்களிற் பலரும் உடனே அவ்விடஞ்சென்று உதவிசெய்தார்கள். அடுத்த ஓய்வுநாள் உடுவிற்பள்ளி மாணாக்கர், மாணாக்கிகள், உடன்வேலையாட்கள் முதலானோர் கூடிய கூட்டத்திலே தேவசமுகம் வாடிக்கைக்கு மேற்பட வந்து தங்கி அவ்விடம் கூடிய அநேகருடைய உள்ளங்களையும் ஊனங்களையும் உருக்கி அதிசமாய்ப் பெலன்செய்ததாகத் தோன்றினது. அடுத்த திங்கட்கிழமை மிஷியோனரிமாரின் பிரார்த்தனைக்கூட்டம் வட்டுக்கோட்டையில் வைக்கப்பட்டது. அத்தருணத்தில் இந்த மிஷியோனரிகளுக்கு சிநேகிதராயிருந்த நயிற் ஐயர், அம்மாளும், மோயாட் துரை, அம்மாளும் மற்றுஞ் சிலபல சிநேகிதரும் போய்க் கூடினார்கள். அன்று பின்னேரம் வழமைபோலப் பிரசங்கம்பண்ணுவதையும் பிரார்த்திப்பதையும் ஒருவர் ஒருவராக எச்சரிப்புவார்த்தைகள் சொல்லுவதையும் நிறுத்திச், கூடிய எல்லாரும் கிருபாசனத்தண்டை சென்று ஆழிய உணர்ச்சியுடனும் சொரிந்த கண்ணீருடனும் செபத்தின் மூலமாக வாதாடினார்கள். ஆம் அன்று பின்னேரம் முழுதும் பிரார்த்தனையிலும் இடைக்கிடை ஞானப்பாட்டுகளைப் பாடித் தோத்திரிப்பதிலும் அத்தருணத்துக்குத் தகுந்த வேதப் பிரதிகளைத் தெரிந்து வாசிப்பதிலுமேயல்லாமல் வேறொன்றிலும் செலவழிக்கப்படவில்லை. அந்நாளைப்போன்ற ஒருநாள் முன் இந்தியாவில் இருந்ததுமில்லை. அந்நாள் எளிதில் எப்போதெனினும் மறக்கத்தக்க நாளுமல்ல. [illegible]நாள் தேவபலமானது முன் எ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்பொழுதிருந்ததிலும் அதிகமாய் மானிப்பாயிலுங் காணப்பட்டது. அங்குள்ள தருமப்பள்ளி மாணுக்கரிற் சிலர் நாங்களும் இரட்சிக்கப்பட என்னசெய்யவேண்டுமென்று விரைவாயும் விழிப்புடனும் வினவலைப்பட்டார்கள். அந்த வாரத்து வியாழக்கிழமை சாயந்தரத்தில் அதிலும் அதிகமாகப் பண்டத்தெருப்பு மிசியோன் ஸ்தானத்திலும்,தேவபெலத்தின் அருட்சி உண்டாகத் தொடங்கினது. பரிசுத்தாவியானவர் பலத்த காற்றடிக்கிற சத்தம் போலவே இறங்கினதாகத் தோன்றிற்று. இதற்குக் கொஞ்சக்காலத்துக்கு முன்தொடுத்து எல்லா ஸதானங்களுக்கும் மையமாகிய வட்டுக்கோட்டைச் சாஸ்திரப்பள்ளி எல்லாருடைய கண்களையும் உள்ளங்களையும் கவர்ந்தது. இந்த மிசியோனின் முதல் விளைச்சல் சேர்க்கப்பட்ட இந்தச் சாஸ்திரப் பள்ளி மாணுக்கர் விசேஷ ஆசீர்வாதத்தை அடையும் பொருட்டாக ஒருநாளாவது தவறாமல் வேண்டுதல்களும் விண்ணப்பங்களுஞ் செலுத்தப்பட்டு வந்தன. தேவனே மிசியோனரிகளையும் அவர்கள் பிரார்த்தனைகளையும் நினையாமல் விடவில்லை. தேவனுடைய அடிச்சுவட்டொலி அப்பள்ளியில் அடிக்கடி கேட்கப்பட்டது. ஆழிய பயபத்தியின் மத்தியிலும் பாவ உணர்ச்சி உண்டானபோதிலும் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவோ என்னும் விசாரங்கள் தோன்றும்போதும் அவருடைய கிரியைகளும் அவ்விடத்தில் வெளிநாடின. அனேகர், தங்கள்தங்கள் பாவங்களைக்குறித்துப் பரிசுத்தாவியால் உணர்த்தப்பட்டும், தெல்லிப்பழையில், ௪௫. உடுவிலில், ௪௬. மானிப்பாயில், ௩௦. பண்டத்தெருப்பில், ௩௦. வட்டுக்கோட்டையில் ௨௫ பேருமாக ௧௭௬ பேர் இருதயமாறுதலுக்கு அத்தாட்சி காண்பித்தார்களென்னத் தெரிய வந்தது. இவ்விதமே பரிசுத்தாவியானவர் கிரியைசெய்யமுதல் மிசியோன் பள்ளிக்கூட, மாணுக்கர் மாணுக்கிகளில் அனேகர் கவலையற்றவர்களாகவே இருந்தார்கள். இருதய மாறுதலை அடைந்தவர்களுக்குப் பலவகையான எதிரிடைகளும் தொல்லைகளும் நேரிட்டன. கொஞ்சநாட்களுக்குப் பின் ஒருநாள் பள்ளிவிசாரணைக்காரருக்கும் உபாத்திமாருக்கும் ஒருகூட்டம் வைக்கப்பட்டது. நல்லூரிலிருந்து கனம். நயிற்றையரும் (Rev. J. Knight) அவருடைய பள்ளிக்கூட உபாத்திமார் சகலரும் வந்து அக்கூட்டத்திற் சமுகமாயிருந்தார்கள். ஆக ௭௫ பேர் கூடிய அக்கூட்டம் அதிக பயபத்தியையும் எழுப்புதலையுங் கொடுக்கத்தக்கதாகவேயிருந்தது. அவர்களிற் ௧௨ பேர்மாத்திரம் ஆத்தும கவலையுள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள். இதுவன்றி அந்நாட்களில் நல்லூர், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணையென்னும் இடங்களில் மிகுதியும் அதிசயத்தை விளைவிக்கத்தக்கதான ஓர் மார்க்க அருட்சி உண்டுபட்டது. அதனால் தேவனே தமது கிருபை மூலமாக மிகுந்த மகிமையை இத்தேசத்தவர்களுக்குக் காண்பிக்கும்படி மார்க்க அருட்சியையே ஓர் எத்தனமாக்குகிறாரென்று மிசியோனரிகள் நம்பிக் களிகூர்ந்தார்கள். மேலும் தேவன் இவ்விதமே தமது ஆவியை விஸ்தாரப்படுத்துவாரேயாகில் சுதேசிகளில் அனேகர் இவ்வூழியத்தில் அதிகமாய் உதவிசெய்யக் கூடுமென்று நம்பியும் இந்த அறியாமையும் அவபத்தியும் நிறைந்த சனங்களுக்குள்ளே இருக்கும் மிசியோனரிகளின் தொகை அதிகப்படாவிட்டால் இக்கிருத்தியங்கள் சரியான உதவியின்மையினால் தடைப்படவுங் கூடுமென்று மிசியோனரிகள் யோசித்தார்கள்.

இங்கிலாந்து அமரிக்கா முதலான கிறிஸ்துமார்க்க தேசங்களில் இப்பெயர்ப்பட்ட எழுப்புதலின் [illegible]கள், அடுத்த திருச்சபைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதகர்களை உதவிக்கு அழைத்துக்கொள்ளக்கூடும். நாங்கள் என்னசெய்வோம். எங்கள் ஆயுளுங் குறுகியது. எங்களில் மூன்றுபேர் இறந்துவிட்டார்கள். மிசியோன் பள்ளிக்கூடங்களும் அதிகப்பட்டுவருகின்றன. தரும வித்தியாசாலைகளின் மாணாக்கர் மாணாக்கிகளின் தொகையை அதிகப்படுத்துவது அகத்தியமாயிருக்கின்றது என நினைத்து, நீங்கள்வந்து எங்களுக்கு உதவிசெய்யுங்களென்று மிசியோனரிகள் அமெரிக்காவிலுள்ள திருச்சபைகளுக்கு அபயமிட்டார்கள். எலவே ஸ்தாபித்திருக்கும் வட்டுக்கோட்டைக் கல்லூரிக்குமாத்திரம் சாமார்த்தியம் தேவபத்தி நல்லறிவு நற்குணம் முதலானவைகளிற் பேர்கொண்ட (௨) வித்தியாபாரகரை அனுப்பவேண்டுமென்றும், அவர்கள் தங்கள் ஆயுள்காலத்தையும் பிரயாசங்களையும் அவ்வித்தியாசாலைக்கென்றே செலவழிக்கவேண்டுமென்ற தீர்மானத்துடனும் அவ்வித்தியாசாலையிலிருந்து ஏராளமான நன்மைகள் பயன்படுமென்ற நம்பிக்கையுடனும் புறப்பட்டுவருவதுமல்லாமல், இவ்விடம் வந்தயிற்பாடு ஓர் அளவுக்கு பண்படுத்தப்பட்ட தளபாடங்களைக் கையேற்றுப் பணிமுட்டுக்களைச் செப்பனிட ஆய்த்தமாய்வரவேண்டுமென்றும், வரமுதல் அமெரிக்காவிற்றானே பணம், புத்தகங்கள், வானசாஸ்திர பூமிசாஸ்திர இயந்திர சாஸ்திரப் படங்கள் முதலானவைகளை அங்குள்ள பரோபகாரிகளிடம் சேகரித்துக்கொண்டு வரவேண்டுமென்றும் வரும்போது இங்கிலாந்துவழியாய் வருவார்களேயாகில் இந்த மிசியோனுக்கும் இந்தியாவில் மிசியோன் நடத்திவருங் கிருத்தியங்களுக்கும் அதிக உபயோகமாய் இருக்குமெனவுங்காட்டி இரண்டு கடிதங்களை ஒன்றின்பின்னொன்றாய் எழுதி அனுப்பினார்கள். அவைகளில் ஒன்றாவது அவ்விடம் போய்ச்சேரவில்லை. போட்சங்கத்து லிகிதர் ௨௪ம் ௵ மாசிமாதத்திலும் சித்திரைமாதத்திலும் இம்மிசியோனுக்கனுப்பிய இரண்டு கடிதங்கள் மிசியோனரிமார்களுக்குங் கிடைக்கவுமில்லை. அதனால் மிசியோனரிகளின் நோக்கங்கள், நினைவுகள், செயல்கள், சங்கத்தின் காரியகாரருக்குத் தெரியவரவுமில்லை. இப்படியிருக்கையில் சங்கத்தின் உதவி லிகிதர் எழுதிய ஓர் கடிதமூலமாக மிசியோனரிகள் கைவிட்டிருக்குங் கல்லூரிக்கு அமெரிக்கன் திருச்சபையார் உதவிசெய்வார்களென்றும் அக்கல்லூரியை நடத்தவேண்டிய மால் மிசியோனரிகள் கையில் இருக்கிறதென்றும் அறிந்துகொண்டார்கள். தரும வித்தியாசாலைகள் பருப்பிக்கப்பட்டும் வட்டுக்கோட்டைக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்த அவ்வாண்டிற்றானே மாணாக்கர் மாணாக்கிகள் மனந்திரும்பிக் குணப்பட்டுக் கிறிஸ்து இரட்சகரில் விசுவாசித்துத் திருச்சபையுடன் சேர்ந்தது மிசியோனரிகளுக்கு அதிக தைரியமாயிருந்தது. மாணாக்கர் மாணாக்கிகளில் அனேகர் பற்பல சாஸ்திர அறிவில் தேறத்தக்க மனம் புத்தி சித்தமுள்ளவர்களாய் இருக்கிறார்களெனக் கண்டு அவர்கள் களிகூர்ந்தார்கள். ஏறக்குறைய, ௧௨௦ வாலிபர் வட்டுக்கோட்டைக் கல்லூரியிற் சேர்க்கப்பட ஆய்த்தமாயிருந்தார்களென்றும் அமெரிக்காவிலுள்ள நல்லுபகாரிகள் யாதொருபிரதிபலனை இம்மையில் எதிர்நோக்காது கொடுக்கும்பண உதவிக்குத் தக்க பலன் மறுமையில் சீக்கிரத்திற் காணப்படும். ஆதலால் இரண்டு மிசியோனரிகளைச் சீக்கிரம் அனுப்பவேண்டுமென்றும் ஆவலிப்போடு மிசியோனரிகள் போட்சங்கத்தின் காரியஸ்தரைக் கோரினார்கள். இக்காலத்தில் சென்னைபட்டினத்திலுள்ள சில கலாவிருத்திப் பிரியரான பரோபகாரிகள்மாத்திரம் ௭௫௦ ரூபாய் கல்லூரிக்கு வெகுமதியாகக் கொடுத்தார்கள். கற்குத்தாவிலிருந்துவந்த பண உதவி மிகச்சொற்பம். இலங்கை அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சியார் விரோதிகளானபடியால் அவர்கள் உதவிசெய்யவில்லை. அமெரிக்கன் திருச்சபையாரையே முழுதும் நம்பிக் கல்லூரியை நடத்தினார்கள். இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள தமிழ்க்குடிகளுக்குள்ளிருக்கும் வாலிபருக்கு நானாவிதமான கல்வியறிவைக் கற்றுக்கொடுப்பதினால் இத்தேசத்திற் பரம்பிவரும் பாவங்களும் மடமைகளும் படிப்படியாய்க் குறையவும், பரதேச மிசியோனரிகளின் உதவி சகாயமின்றி அவர்களே யேசு இரட்சகரின் தொண்டை நடத்தவுந்தக்கதாய் வருமென்றும் அமெரிக்கன் சபைகளுக்கு மிசியோனரிகள் தெரிவித்தார்கள். கல்லூரி மாணாக்கர் கல்வியறிவில் தேற்றமடைந்து வந்ததையும் திருச்சபைத் தலைவரின் சமுகமாகிய மேகம் அக்கல்லூரியின்மேல் நிழலிட்டுப் படிந்ததையும், மிசியோனரிகள் உணர்ந்து தங்களிலொருவர் அமெரிக்காவுக்குப்போய் இதுகாரியத்தை முகாமுகமாய்த் தெரிவித்து வாதாடி, அங்குள்ளோரின் உதவிபெற்றுத் திரும்புவது புத்தியல்லவோ என்று யோசித்தார்கள். மேலும் நீங்கள் இக்கல்லூரியை நடத்தப்போகிறீர்களோ? அல்லவோ? இப்பெயர்ப்பட்ட பாரதூரமான உதவிசெய்யாமல் விட்டு இவ்வூர்ச்சனங்களை மாண்டுபோகப் பண்ணப்போகிறீர்களோ? நீங்களே பாருங்களென்று அமெரிக்கன் சபைகளுக்கு மிசியோனரிகள் திரும்பத்திரும்ப அபயமிட்டார்கள்.

௧௮௨௪ ம் ௵ மாசி மீ வரையில் அந்தந்தச் சபைகளிலுண்டான மார்க்க எழுப்புதல்கள் ௨௫ ம் ௵ மாசி மீ வரைக்கும் அதிகப்பட்டுவந்தும் பின்பு கிரமக்கிரமமாய்க் குறைவுபடத் துவங்கினது. ஆயினும் அவ்வெழுப்புதல்களாலுண்டான காரிய சித்தியோ அங்கங்கே சந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கதாயிருந்தது. சிலருடைய இருதயமாகிய வயல்நிலமோ கற்பார்போன்றிருந்தும், பலரோ பொறுமையுடனே மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் காண்பித்ததுமன்றித் தங்கள் இனத்தாரான அஞ்ஞானிகளாலுண்டான நிந்தை, துன்புறுத்தல், தூஷணங்கள் முதலானவைகளை எதிர்த்துத் தங்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்தார்கள். அவர்கள் விசுவாசத்திற் பரிசனையற்றவர்களாயிருந்தும், உண்டான பற்பல சோதனைகள் தொல்லைகளின் மத்தியில் தொடர்ந்தேற்றியுள்ளவர்களாய் நின்றநிலையை மிசியோனரிகள் கவனித்துக் கோனாய்களுக்குள் இருந்த ஆட்டுக்குட்டிகளை யாதொரு விக்கினமின்றிப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டுத் தேவனைப் பிரார்த்தித்து வந்தார்கள்.

L. S.

## ROMANISM.

## ரோமான் மார்க்கம்.

(தொடர்ப்பு.)

How the true and ancient church may be known?—பூர்வீக சத்திய திருச்சபை எப்படி அறியப்படும்? பூர்வீக சத்திய விசுவாசத்தைக் கைக்கொள்வதினாலே தான். நவ[illegible]னதுமான ஒரு சபை எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யறியப்படும்? நூதன அசத்திய விசுவாசத்தைக் கைக்கொள்வதினால் அது அறியப்படும். ஆகவே, இதிகாசத்தினால் சத்தியமுள்ளதென்று திருஷ்டாந்தப்படுத்தப்படக் கூடியதும் பரிசுத்த வேதவாக்கியங்களின் உரைகல்லுக்கு நிற்கக்கூடியதுமான பூர்வ சுத்த சத்திய விசுவாசத்தைக் கைக்கொள்ளுகிற சபை எதுவோ அதுவே பூர்வ சத்திய திருச்சபை என்பது பிரத்தியட்சம். இதிகாசத்தினாலாவது, வேதவாக்கியங்களினாலாவது, திருஷ்டாந்தப் பரீட்சைக்கு நிலைநிற்கக் கூடாத, நூதன விசுவாசத்தைக் கைக்கொள்ளுகிற சபையே நூதன சபையாம்.

What is the true and ancient faith?—பின்னை பூர்வ சத்திய விசுவாசமாவதென்ன? நமது சமய குருவாகிய கிறிஸ்துவினால் வெளிப்படுத்தப்பட்டிருப்பதும், அவருடைய சீஷர்களாலும் அப்போஸ்தலர்களாலும் கூறிப் பிரசங்கிக்கப்பட்டதும் அவர்கள் எழுதிய சாதனங்களில் அடங்கியிருப்பதுமான விசுவாசம் எதுவோ அதுவே ஒரே சத்திய பூர்வ விசுவாசமாம்.

The summary of this faith.—இவ்விசுவாசத்தின் முதற்றிரட்டு யாதெனில், கிறிஸ்துவுக்குப்பின் ௩௨௫ ம் வருஷத்தில் நீசேயாப் பட்டணத்தில் கூடின சங்கத்தாரால் விஸ்தரிக்கப்பட்டு உறுதியாக்கப்பட்ட அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணமென்று பொதுவாக வழங்கும் பிரமாணமேயாம். அது கிறிஸ்துவுக்குப் பின், ௩௮௧ ம் வருஷத்தில் கொன்ஸ்தந்திநோபிள் புரியிலும், ௪௩௧ ம் வருஷத்தில் எபேசுநகரத்திலும், ௪௫௧ ம் வருஷத்தில் கால்சிதோன் நகரத்திலும், கூடின சங்கங்களில் தொகுத்துரைக்கப்பட்டு நிலை நிறுத்தப்பட்டது. ௧௫௬௩ ம் வருஷத்தில் திரெந்த சங்கத்தினால் அது மாறுதலடையாமல் நிலைபெற்றிருந்ததென்று திருஷ்டாந்தப்பட்டது. இதுவே ௧௫௬௪ ம் வருஷம் மார்கழிமாதம் ௯ ந் திகதிவரைக்கும் கிறிஸ்த திருச்சபையின் விசுவாசப்பிரமாணமாயிருந்தது. இதுவே இப்பொழுதிருக்கிற சத்திய வேதமார்க்க அநுசாரிகளான சகல கிறிஸ்தவர்களின் விசுவாசப் பிரமாணமாயிருக்கின்றது.

The creed of the church of Rome is novel.—நாலாம் பையஸ் என்னும் பாப்புவினால் இப்பூர்வ விசுவாசப்பிரமாணத்தோடு பன்னிரண்டு நவமான பிரமாணங்கள் சேர்க்கப்பட்டு ரோமைச்சபையின் நூதன விசுவாசப் பிரமாணமாக ௧௫௬௪ ம் வருஷம் மார்கழிமாதம் ௯ ந் திகதி பிரசித்தமாக்கப்பட்டது. இந்த நூதன விசுவாசப்பிரமாணம் ௧௫௬௪ ம் வருஷம் வரைக்கும் எச்சபையிலாவது ஒருக்காலும் அறியப்படாதிருந்தும் இப்பொழுதிதுவே ரோமைச்சபையின் விசுவாசப்பிரமாணமாயிருக்கின்றது. பூர்வீகத்திலுள்ள திருச்சபையில் எதாவது இவ்விசுவாசப்பிரமாணத்தை எப்பொழுதென்கிலும் அநுசரித்ததில்லை. சாதாரண திருச்சபையின் சரித்திரப் புத்தகங்களில் யாதொன்றிலாவது இது காணப்பட்டிருக்கவுமில்லை. எச்சங்கமாவது, எக்காலத்திலேனும், இதை ஸ்தாபித்து உறுதிப்படுத்தவுமில்லை.

The church of Rome has turned from the ancient faith.-நாலாம் பையஸ் பாப்புவினால் பிரசித்தம்பண்ணப்பட்ட இப் பன்னிரண்டு நூதனவிசுவாசப்பிரமாணங்களுமே, ரோமைச் சபையின் விசுவாசப் பிரமாணமாம். ரோமைச்சபை பூர்வ விசுவாசப்பிரமாணத்தை விட்டு வழுவி, இந் நூதன விசுவாசப்பிரமாணத்துக்குத் திரும்பிவிட்டது. அவர்களுடைய நூதன விசுவாசப்பிரமாணத்தின் மூலாதாரங்கள் தேவவாக்கிற் காணப்படாதிருப்பதினால் சனங்கள் விவிலிய வேதாகமத்தை வாசிக்கலாகாதென்றும், அவர்கள் பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதினாற் போதிக்கப்படவாகுதல் இடங்கொடுக்க ரோமைச்சபை பயப்படுகின்றது

Marks of the true church.—கிறிஸ்துவின் சத்திய திருச்சபை நான்கு அதிகுறிகளினால் அறியப்படும், அவையாவன, (apostolicity) அப்போஸ்தலர் பரம்பரியம், (hnity) அன்னியவொன்னிய ஐக்கியம், (catholicity) சாதாரணத்துவம், (u liness) பரிசுத்தம் என்பவைகளே. இவைகளெல்லாம் தனக்குரியதென்று ரோமான்சபை உரிமை பாராட்டுகின்றது. ரோமான்மார்க்க மகா கேடுகளில் ஒன்று, இதுதானென்று சொல்லுகிறேன். அது, சத்திய சமயத்துக்குரிய குறிப்படையாளங்கள் எல்லாம் தன்னுடையதென்று சாதிக்கின்றது. வாசிப்போர் இதனால் வஞ்சிக்கப்படாதபடி அவாவுடன் எச்சரிக்கிறேன். மெய்யாகவே நஞ்சை ஒரு குப்பியில் விட்டு அடைத்து அதன் வெளிப்பக்கத்தில் இது தேனென்றெழுதினால் அது தேனாகாது. அதுபோல, ஒரு திருடனை நேராளி, (கிறேஸ்தன்) என்றழைப்பதினால் அவன் கிறேஸ்தனாகிறதில்லை

Examination of the claim to apostolicity.—அப்போஸ்தல பரம்பரியம். இதினால் விளங்கிய கருத்தென்னவெனில், திருச்சபையானது அப்போஸ்தலரால் நாட்டப்பட்டு, அவர்கள் போதித்த உபதேசங்களையே கைக்கொண்டு, அநுசரித்து வருகின்றதென்பது. உரோமைச் சபையானது, தனது உபதேசங்களையும், அன்னியொன்னிய ஐக்கத்தையும், தனது குருப்பட்டங்களையும், சாரணத்துவத்தையும், கிறிஸ்துவின் அப்போஸ்தலரிடத்திலிருந்து பெற்றுக்கொண்டேனென்று சாதிக்கின்றது. சந்நியாச நிலையானது, ௪ம் சதார்த்தத்தில் ஸ்தாபிக்கப்பட்டதெனக் காண்போம். அது அப்போஸ்தலருக்குரியதா? உத்தரிக்குந் தலமும், சுத்தவானருக்குப் பிரார்த்தனைகளும், ௬ம் சதார்த்தத்தில் உபதேசிக்கப்படத் தொடங்கின. அவைகளும் அப்போஸ்தலருக் குரியனவா? ௮ம் சதார்த்தத்தில், சுரூபாராதனை, எதிரிடையைச் சயங்கொண்டது. தேவ வசீகரம் ௯ம் சதார்த்தத்தில் எடுத்துத் தொடுக்கப்பட்டது. பாவமன்னிப்பின் இலக்காரமும், ௰ம் சதார்த்தத்துக்கு முன் கொடுக்கப்படவில்லை. சகல குருவகுப்பாரின் கட்டாயமான பிரமசரியமானது, ௧௧ம் சதார்த்தத்தில் கண்டிப்பாய் விதிக்கப்பட்டது. நற்கருணையில் ஒருபகுதியைமாத்திரம் பரிமாறும்வழக்கம், ௧௨ம் சதார்த்தத்திலுண்டானது. பாவ சங்கீர்த்தனம் ௧௩ம் சதார்த்தத்தில் நிரூபிக்கப்பட்டது. சாக்கிரமேந்துகளின் தொகை ஏழாக திறெந்த சங்கத்தினால் ௧௬ம் சதார்த்தத்தில் அறிவிக்கப்பட்டது. இந்தச் சங்கத்திலேதானே வேறனேக அருவருப்புகள், அங்கீகாரம்பெற்று உறுதியாக்கப்பட்டன. கன்னிமரியாளின் நின்மலகர்ப்ப உற்பத்தி (The immaculate conception of virgin Mary) இற்றைக்குப் பதினேழு வருஷங்களின் முன், அதாவது, ௧௮௫௪ம் வருஷத்தில் விசுவாசப்பிரமாணத்தின் ஓர் பகுதியாக ஏற்படுத்தப்பட்டது. பாப்பு தவறுமையுள்ளவரென்னும் கொடிய தேவதூஷணமான போதனை சென்றுபோன ஆண்டு அதாவது, ௧௮௭௦ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இவைகளெல்லாம் அப்போஸ்தலருக்குரியனவா?

What saith the Lord?—முன்சொல்லிய இவைகளில் எதையாவது, புண்ணியத்தைப்பற்றிய போதனையையாவது, தன்னுருபிடியாகமத்துக்குத் தேவசாட்சியையாவது, பாப்புமுதல், மேப்பு வரை ரோமைக் குருத்துவத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிய பல குருப்பட்டங்களையாவது பற்றிப், புதிய ஏற்பாட்டாகமங்களில் காணலாமென்று நீங்கள் எண்ணியிருப்பது விருதா. பின்னை, ரோமைச் சபையின் அப்போஸ்தல பரம்பரியமெங்கே இருக்கின்றது ?

Rome's claim to unity.—திருச்சபை ஏகமானதென்று உறுதிசாதிக்கப்பட்டிருக்கின்றது. இதன் பொருளென்னவெனில் ரோமைச்சபை எக்காலங்களிலும் ஒரே உபதேசத்தைக் கைக்கொண்டு ஒரேவகையான சடங்காசாரங்களை அநுசரித்து வருகிறதென்பதும், அதின் விசுவாசப்பிரமாணத்தையாவது, அதின் ஆராதனையின் போங்கையாவது, ஒருபொழுதும் விகற்பித்ததில்லை, பருப்பித்ததில்லை, குறைத்ததில்லை என்பதுமேயாம். இதைப் பார்க்கிலும் மகா அசத்தியமானதொன்றாயிருப்பது கூடாது. ௧௫௬௩ம் வருஷத்தில் கூடிமுடிந்த, திரெந்த சங்கத்தில் பூர்வ திருச்சபையின் விசுவாசப்பிரமாணத்தோடு ௧௨ நூதன விசுவாசப்பிரமாணங்கள் சேர்க்கப்பட்டனவென்று நான் முன் காட்டியிருக்கிறேன். திருச்சபை இதிகாச மாணுக்கனெவ்வொருவனும், இவ்விசுவாசப்பிரமாணம் ஒவ்வொன்றும் பூருவ திருச்சபைக்குத் தெரியாதிருந்ததென்று பூரணமாய் அறிவான். பின்னை, அச்சபை பெருமைபாராட்டிய அன்னியவொன்றிய ஐக்கியமென்னவாகின்றது ? ஒன்றில் பூர்வ திருச்சபையின் விசுவாசப்பிரமாணம் குறைவாயிருப்பதில் தவறுபடவேண்டும். அல்லது, திரெந்த சங்கத்தின் விசுவாசப்பிரமாணம் அதனப்படுவதினால் தவறிப்போயிற்று.

What does St. Paul say ?—வாசிப்பவனே, இதைக் கவனி. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு நகரத்தில், பயந்து நடுங்கின சிறைச்சாலைத் தலைவனுக்குப் பிரசங்கித்தபொழுது. "கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள். அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" என்று சொன்னார். அப்போஸ்தலர். ௧௬, ௩௧.

What does the Pope say ?—௪ம் பையஸ் பாப்புவோ, நீங்கள் பாரம்பரையையும், சத்தசாக்கிரமெந்துக்களையும், நரா புண்ணியத்தையும், பூசையையும், தேவ வசீகரத்தையும் உத்தரிக்கும் ஸ்தலத்தையும் பாவமன்னிப்புச் சீட்டுக்களையும், சுத்தவாளரின் பரிந்துபேசுதலையும் விசுவாசிக்கவேண்டும். இவைகளே சத்திய கத்தோலிக்க விசுவாசத்தை நிலைப்படுத்துகின்றன. இவைகளையின்றி ஒருவனும் இரட்சிக்கப்படக்கூடாது. இதற்கு விரோதமான எதிர்நியாயம் ஆரெடுத்துப் பேசுவாரோ பேசட்டுமென்கிறார். அப்போஸ்தலனையோ, பாப்புவையோ யாரை நம்பவேண்டும் ?

Romanism may have uniformity, but she has not unity ?—இன்னுமோர் கவனிப்பு: ரோமான் கத்தோலிக்கச் சபையாரெல்லாரும் வெளியரங்கமாய் ஒரே விசுவாசப் பிரமாணத்தை அநுசரிக்கையில், அவ்விசுவாசப் பிரமாணத்தின் விருதியான பகுதிகளுக்கு அவர்கள் கொடுக்கும் அர்த்தம், பலவிதமானதும், கூடியளவு ஒன்றுக்கொன்று ஒவ்வாமையுள்ளதாயும் இருக்கின்றது. கன்னிமரியாளின் நின்மல கற்ப உற்பத்தியைக்குறித்து டொமினிக்கன்சும், பிரான்சிசுக்கன்ஸும், வித்தியாசப்பட்டார்கள். இன்னும் வித்தியாசப்படுகிறார்கள். தேவகிருபையைக் குறித்துப் பேசிய வியாச்சியத்தில், ஜென்சயூற்சுகளும், யேசுவிற்சுகளும் கடிதாய் வாதாடினார்கள். பாப்புவின் தவறாமையைப்பற்றிய கோட்பாட்டுக்கு விரோதமாய்ச் சிலமாதங்களுக்குமுன், அநேக சிரேஷ்ட குருமாருடைய பயபத்தியான எதிருரை எல்லாருக்கும் ஞாபகமாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

But even allow this boasted unity of Romanism.—தப்பிதத்தையும் ,அவபத்தியையும் பிடிவாதமாய்ச் சாதிப்பதில் அனேக தொகையானவர்கள் இசைந்திருப்பது, அவர்களுக்குச் சார்பான நியாயத்தை ஏற்படுத்தமாட்டாது. மற்றப்படி புத்தசமைய, அல்லது, மகமது சமைய, அனுசாரிகளின் தொகை மற்றெந்தவிதமான கிறிஸ்தவர்களின் தொகையைப்பார்க்கிலும் நிச்சயமாய் மகா ஏராளமாயிருப்பதால் அச்சமயங்களே தெய்வீகமானவையென்று அத்தாட்சிப்படுத்தப் படலாமே.

Rome's claim to catholicity considered?— (௫) ரோமைச்சபை கத்தோலிக்கச் சபையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. கத்தோலிக்கச் சபையென்றதால் எங்குமுள்ள பொதுவான சபையென்று அர்த்தம் கொள்ளுமென்பதைச் சொல்லவேண்டிய அவசரமில்லை. (ab omnibus ab semper ab ubique) ரோமைச் சபை கத்தோலிக்கச் சபையென்று போலிசாலம்பண்ணுகின்றது. அதின் பிள்ளைகள் தாங்கள் எங்குமுள்ள பொதுவான சபையாரென்று எப்பொழுதுஞ் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால், அது தன் விசுவாசத்தினாலும், தன் சரித்திரத்தினாலும். இப்பட்டப் பெயருக்குப் பாத்திரமுள்ளதாயிருக்கிறதா? ரோமானித்தார் தங்களைக் கத்தோலிக்கச் சபையாரென்று சரியாய்ச் சொல்லிக்கொள்ளக் கூடுமோ? நிச்சயமாகவே அப்படிச் சொல்லிக்கொள்ளக்கூடாது.

The New Testament definition of a catholic.-இவ்விஷயத்தின்பேரில் விவிலிய வேதபோதனை என்ன? "கொரிந்துநகரத்தில் கிறிஸ்து யேசுவினாற் சுத்திகரிக்கப்பட்டவர்களும் பரிசுத்தராவதற்கு அழைக்கப்பட்டவர்களுமாகிய தேவனுடைய சபையாருக்கும் எவ்விடத்திலும் நமக்குந் தங்களுக்கும் கர்த்தராயிருக்கிற யேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் பிரார்த்தனைபண்ணிவருகிற யாவருக்கும்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்குச் சொன்ன, முதற்பிரசங்கத்தில் "கத்தோலிக்க" என்பதின் சரியான அர்த்தம் இன்னதென்று காட்டியிருக்கிறார். இதுவே புதியேற்பாடு. கத்தோலிக்கத் திருச்சபையென்றதற்குக் கொடுக்கும் அர்த்தம் அதாவது கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றி ஆராதிப்பவர்களேயாம்.

A Catholic according to the sense of Church of Rome.—இப்பொழுது, ரோமைச்சபை கத்தோலிக்கச் சபையென்றதற்கு, அங்கிகரித்துக்கொள்ளும் அர்த்தம் என்னவென்று பார்ப்போம். பாப்புவைப் பின்பற்றுகிறவர்களும் ரோமான் மார்க்க விசுவாசப் பிரமாணங்களிற் சில போது அறிவுக்கு எவ்வளவு விரோதமாயினும், அதைப்பற்றி அக்கறைப்படாமல் அவைகளை விசுவாசிக்கிறவர்களும், ரோமானித்தார் கிறிஸ்துயேசுவிலும் கன்னிமரியாளையே மிகுதிபற்றி வழிபடுகிறவர்களாய் இருக்கிறார்களென்று நாம் முன் காட்டியபடி, ஒரே சொல்லாகச் சொல்லுகில், அதின் பிள்ளைகளெல்லாரும் அதினால் யாதொரு இரட்சிப்பில்லையென்று சொல்லக்கூடியதாயிருந்தாலும் ரோமான் கத்தோலிக்க சபையின் அங்கங்களாய் இருப்பவர்களுமே சாதாரண சபையாம். ரோமானித்தார் தங்களைக் கத்தோலிக்க சபையாரென்று சொல்லிக்கொள்ளுகிறதில் தவறானவர்கள் என்பதை வாசிப்போர் அறியவேண்டும். அவர்கள் ரோமான் கத்தோலிக்கராய் இருக்கலாம். ஆனால் அவர்கள் சாதாரண சபையாரல்ல. இவ்விஷயத்தைக் குறித்து இப்பொழுது விஸ்தாரமாகப் பேசக் காலமிடம் போதாமையால் இனிவரும் பகுதியில் அதிகம் வி[illegible]ம்.

(இன்னும்வரும்)

T. G.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SKETCH OF A SERMON.

## பிரசங்கக் குறிப்பு.

### The Christian's High Calling.

### கிறிஸ்தவனின் மேலான அழைப்பு.

1 பேதுரு, 5 : 10.

இந்த வசனத்திலுள்ள

I. யெகோவாவுக்கு இடப்பட்ட நாமம்—"சகல கிருபையும் பொருந்திய தேவன்."

(1) அவர் தடைப்படுத்துங் கிருபைக்கும், ஆதி. 16 : 2.
(2) குணப்படுத்துங் கிருபைக்கும், 2. தீமோ. 2 : 25.
(3) நீதியாக்குவதும் சீர்ப்படுத்துவதுமான கிருபைக்கும், ரோ. 3 : 24.
(4) பரிசுத்தப்படுத்துங் கிருபைக்கும், கர்த்தர். யாத்தி. 31 : 13.

II. அவர் நம்மை எதுக்கு அழைத்தார். "தமது மகிமைக்கு அழைத்தார்" இங்கே மறுமைக்குரிய இன்பத்தின் மூன்று விசேஷங்களைக் காணலாம்.

(1) அதின் தன்மை—"மகிமை"
(a) மகிமைபொருந்திய சபை. எபி. 12 : 22, 23.
(b) மகிமைபொருந்திய ஊழியம். வெளி. 7 : 15.
(c) மகிமைபொருந்திய அனுபவம் என்பவைகளே. சங்கீ. 16 : 11.

(2) அதின் விசேஷ நாமம்—"தமது"
(a) அவர், இதற்கும் மற்றும் சகல கிருபைக்குங் காரணர்.
(b) அதைக் கொடுப்பவர். சங்கீ. 84 : 11.
(c) அவருடைய சன்னிதானத்தில் அனுபவிக்கப்படுவது.

(3) இந்த மகிமை, நிலைக்குங் காலம்—"நித்தியம்"
(a) சகல மனுஷ மகிமைக்கும் விகற்பப்பட்டது; அவை அநித்தியமானதும், வாடுவதும் அழிவதுமானவை : இதுவோ செழிப்பதும் அழியாததும் நித்தியமுமானது.

III. பரிசுத்தவான்களின் மகிமைபொருந்திய அழைப்பின் வழி—"கிறிஸ்து யேசு"

(1) அவருடைய இரத்தத்தின் புண்ணியம். எபி. 10 : 20.
(2) அவருடைய சுவிசேஷ பிரசங்கம். ரோம. 1 : 16.
(3) அவருடைய ஆவியின் வரப்பிரசாதம். ரோம. 8 : 9, 10, 11.
(4) அவருடைய தேவ ஆளுகை. ரோம, 8 : 28.
(5) அவருடைய மகிமையுள்ள முன்மாதிரி. 1. பேதுரு. 2 : 21.

### எச்சரிப்பு.

(1) பாடனுபவிக்குங் கிறிஸ்தவனே, இதுவே உனது மேலான அழைப்பு.
(2) உனது மார்க்க விசுவாசத்திற்கிணங்கச் சீவிக்கிறுயா?
(3) தேவன் உன்னை "பூரணப்படுத்திப், பெலப்படுத்தி, இஸ்திரப்படுத்தி, உறுதிப்படுத்தும்படியாக" தேவ ஆளுகைக்கு உன்னைக் கீழ்ப்படுத்திக்கொள்.

C. M. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LYRIC.

### கிறிஸ்து பிறப்பின்பேரில்.

பல்லவி.

கண்டுகொண்டேன் சுவாமியை நான் கண்டுகொண்டேனே. எந்தன்.
கண்மணியாகிய விண்மணிராசனைக் கண்டுகொண்டேனே.

௧. விண்டலநாதனை மண்டலபோதனை எந்தன்.
மெய்ப்பொருளாகிய மேசியவேந்தைக் கண்டுகொண்டேனே. கண்டு.
௨. பெத்தலேகூரிலே சத்திரத்தாரிலே யூதப்
பெண்ணொருமரியேனும் கன்னிகைமுன்னிலே கண்டுகொண்டேனே.
கண்டு.
௩. ஆசைக்கண்ணுளர் ஆத்துமமனுளர் எந்தன்.
ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவைக் கண்டுகொண்டேனே. கண்டு.
௪. பாவி நான்பாடவும் பாக்கியங்கொண்டாடவும் எந்தன்.
பவவினைதொலைத்திட வந்தசுவாமியைக் கண்டுகொண்டேனே. கண்டு.
௫. என்கலிதீருமே என்மனம் ஆறுமே ஆகா
எனதிருதயமது களிகூருமே நான் கண்டுகொண்டேனே. கண்டு.
௬. சுவிசேசவாசனை விசுவாசநேசனை என்னைத்
தாக்கவும் காக்கவும் வந்தகடவுளைக் கண்டுகொண்டேனே. கண்டு.

### கிறிஸ்து பிறப்பின்பேரில்.

பல்லவி.

இலங்கும் பரமண்டலத்து ஏசையாவைப்பாடும்
எண்டிசையும் முழங்கிவரப் பண்டிகைகொண்டாடும்.

அனுபல்லவி.

அலங்கிருத வானுலக அதிபதிக்குத் துதிபெருக
அன்புடன் அதிஇன்புடன் மிகநண்புடன் கவியன்புடன் படித்திலங்கும்

சரணங்கள்.

௧. வெல்லைநகர்மீதுதித்த மேசையாவைப்போற்றி
வெண்டுயில்களணிந்து ஒரு மிக்ககவிசாற்றி
சொல்லரிய மந்திரனை வெல்லைநகர்ச்சந்திரனை
துலங்கவே அவரிலங்கவே, மிகவிளங்கவே, புவிமுழங்கவே அழ-இல
ங்கும்.
௨. சேனைகளின் கர்த்தருடை திருச்சுதன்பூண்டார்
சிறந்த பரமண்டலத்தை மறக்கமனங்கொண்டார்
ஊனலோக ராசருக்கும் ஈனலோகநீசருக்கும்
வானமே சமாதானமே நற்பியானமே திருஞானமே உயர்ந்-திலங்கும்.
௩. வானத்து நட்சேத்திரத்து மகிமைப்பிரகாசம்
மானிடருக்கு ஒளிகொடுத்து வருத்துதே சந்தோஷம்,
ஞானசிலர் தேடிவந்தார் கோனர்பலரோடிவந்தார்
நாயனை நமதாயனை ச[illegible]யனைக் காண-இலங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A TRUE STORY.

## நிச்சயப் பொருட்பற்று.

இங்கிலந்துதேசத்திலே கனவானுந் தனவானுமான பிரபு ஒருவன் இருந்தான். அவனுடைய செல்வம் ஏராளமாயிருந்தது. அந்தச் செல்வத்தினாலும், இனத்தார் சனத்தார் ஓயாது சொல்லிவந்த புகழ்ச்சியினாலும், காண்பித்துவந்த கனத்தினாலும், அவனுடைய மனம் பூரித்துச் சந்தோஷமுள்ளவனாயினான். அவனுக்கு மிக அருமையான ஒரேயொரு புத்திரியிருந்தாள். அவள் பற்பல பாஷைகளைக் கற்று நானாவித கல்வியிலே தேற்றமடையவும், மேன்மக்கள் பார்த்து இவள் நல்ல ஒரு ஐசுவரியவாட்டியென்று சொல்லவும், பிரபுக்கள் சேர்மானத்தைத் தேடவும், நடை உடை நாகரீகம் முதலானவைகளிற் சிறப்படைந்த பிரான்சுமுதலான தேசங்களிற் சவாரிசெய்யவும், உயர்ந்த கல்லூரிகளிற் கல்விகற்கவும், வெகு பணத்தைச் செலவழித்தான். அவள் பிதாவானவன் தன்மேல்வைத்த எல்லைக்கடங்கா அன்பினிமித்தம் அதிகம் நன்றியுள்ளவளாயிருந்தாள். அவள் முதற்தர அழகுள்ளவளும் கல்வியறிவில் நிபுணத்துவமுள்ளவளும் எல்லாராலும் நேசிக்கப்பட்டு மெச்சிக்கொள்ளப் படத்தக்கவளுமாயிருந்தாள். அவளுடைய பிதா, மாதா இனத்தார் சனத்தார் முதலான எல்லாரும் தேவபத்தி சற்றேனும் இல்லாதவர்களாயிருந்தாகள். ஒருநாள் தற்செயலாய் லண்டன்நகரத்திலேயுள்ள ஓர் தேவாலயத்துக்குப் போயிருக்கையில் ஓர் குருவானவர் எடுத்துச் சொன்னவேத உபதேசத்தைக் கேட்டமாத்திரத்தில் மனங் குற்றுண்டுபாவத்தினிமித்தமும்நீதியினிமித்தமும்,நியாயத்தீர்ப்பினிமித்தமும்,கடிந்துகொள்ளப்பட்டான். உடனே அவள்பிரமித்து ஐயோ! நான் என்னசெய்துவந்தேன், எனது கோலாகாலப் பிரபுடீக்கமும், பாக்கியமும், ஒய்யாரமான நடையும், பிரபுக்கள் சேர்க்கையும் என்னத்துக்குதவும். நான் இதுகாலவரையும் எனது விலையேறப்பெற்ற ஆத்துமாவையும் அதைப் பந்தித்திருக்கும் பாவங்களையும் பாவப்பரிகாரியாகிய இயேசு இரட்சகரையும், மறுமையையும் மறுமைப்பேற்றையும் குறித்து நினையாதிருந்தது எவ்வளவு புத்தியீனமென்று நினைத்துத் தனது பாவங்களுக்காகத் துக்கித்து மனஸ்தாபப்பட்டுத் தன்னைத் தாழ்த்தி ஓர் கிறிஸ்தவளாகி அவள் அன்றுமுதல் வேதவாக்கியங்களில் அதிக பற்றுவைத்து, அவைகளின் உட்பொருளை உணரத்தொடங்கினாள். கிறிஸ்தவர்களுடன் கூடித் தேவாலயத்துக்குச்சென்று அங்கே கூடும் பத்தசனங்களோடே சந்தோஷப்படுவதே அவளுக்கு இன்பமான சாவகாசமாயிருந்தது. கிறிஸ்துமார்க்க உபதேசங்களும், விதிவிலக்குப் பிரமாணங்களும் தன் சீவனென்று எண்ணி வந்தாள். சடிதியாய் உண்டுபட்ட வித்தியாசமான நடை, குணம், செயல், கொண்டாட்டம் முதலானவைகளினிமித்தம் அவளுடைய பிதா மிகுதியும் துன்புற்று, நான் ஒன்றுநினைக்க அது பின்னொன்றாய் முடிந்ததேயென்று சொல்லிக்கொண்டு அவளுடைய போக்குவரவையும் செய்கைகளையும் அதிக கவனத்தோடே நாடோறும், ஆம் நிமிஷந்தோறும் பார்த்துவந்தான். தான் பெற்றுவளர்த்த தனது அருமைப் பெருமையான மகள் வேத உபதேசங்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கின நாள்முதல் இவ்விதமே மயங்கி மருட்பிடித்துக் கெட்டுப்போனாளே என்றெண்ணி அவன் சற்றேனும் ஆறுதலின்றி ஓயாது பிரலாபித்து அவளுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்கோட்டத்தையும் மாறுதலையும் அகற்றவேணுமென யோசித்து ஒரு பெருந்தொகையான பணத்தையெடுத்து அவள்கையிலிட்டு, என் அன்பான குமாரத்தியே : நான் பேராசையுடன் போற்றி வளர்த்த செல்வமே, நீ இவ்வளவு பணத்தையும் ஏற்று உனக்கிஷடமானபடி செலவழித்துக்கொள். உனக்குவப்பான ஆடை ஆபரணங்களை வாங்கி அணிந்து உன்னை அலங்கரித்துக்கொள். உனக்கிதமானபடி பிரபுக்களை வரவழைத்து உச்சித விருந்து கொண்டாடிப் பிரபுகளுக்குள் பிரபுடீகமாய் நடந்து பேரெடுப்பாயாக என்று சொன்னான். அதுமாத்திரமல்ல, சமையம் நேரிடும்போதெல்லாம் தான் கையிடும் நெடுந்தூரப் பிரயாணங்களிலும் யாத்திரைகளிலும் அவளையுந் தன்னோடு கூட்டிக்கொண்டுபோய் அங்கங்கேயுள்ள மேன்மக்கள் கூடுஞ் சந்தோஷமுள்ள கூட்டங்களிலே சேர்ப்பதினால் அவளுடைய மனதை மாற்றப்பார்த்தான். ஆகிலும் அவளோ தன் தேவபத்தியையும் தன் மனதிற்பதிந்த பாவ உணர்ச்சியையும், தான் நோக்கிய இயேசு இரட்சகரையும் கொஞ்சமேனும் மறவாது இயேசுக்கிறிஸ்துவின்பேரில் மிகுதியுஞ் சந்தோஷப்பட்டாள். பிதாவோ தன் குமாரத்தி தான் நினைத்துச் செய்த இனிமையான வேஷங்களினாலும் கோலாகாலங்களினாலும் சீர்படவில்லையென்று கண்டு அவள் ஒன்றில் வேதப்பற்றை விட்டுவிடவேணும் அல்லது பித்தங்கொண்டவளென்ற பெயர்தரிக்கவேணும், இதை யாரும் அறியத்தான் வேணுமென யோசித்து, அனேக பிரபுகளை அழைத்து ஒரு கூட்டம்வைத்தான். அக்கூட்டத்துக்கு வந்த சகலரும் பெரிய மகா அலங்காரமான மாளிகையில் உழுக்கார்ந்தார்கள். அந்த மாளிகையிலே பெரிதாம் ஓசையுமான ஒரு வீணையிருந்தது. அத்தருணங் கூடிய யாவரும் ஒருவர் பின்னொருவராய் அதிலே ஒவ்வொரு கீதம் வாசிக்கவேண்டுமென்றும், தன் குமாரத்தியோ கடைசியில் ஒரு கீதம் வாசிப்பாளென்றும் அவன் உபாயமாய்ச் சொன்னான். இப்படியே ஒவ்வொராளும் தன்தன் மனக்கிடக்கைக்கேற்க கீதங்களை வாசித்தபின்பு அவனுடைய குமாரத்தி எழுந்து வீணைக்கருகே உழுக்கார்ந்தாள். அந்நேரத்தில் பிதாவுடைய கவலையே அதிக பெலன்கொண்டதினால், அவன் நெஞ்சு பதறி அடித்தது. ஆயினும் அவன் கண்களோ அதிக கவனத்தோடே அவளை உற்றுப்பார்த்தன. மகளோ அதிக தெளிந்த மனத்தோடே வீணைக்கருகே உட்கார்ந்து வேற்றுமையான ஓசையை ஒலிக்கும் நரம்புகளைத் தட்டிச் சுதிகூட்டிப் பின் தெளிந்த குரல் ஓசையோடே ஒரு கீதத்தைத் தொடங்கினாள் அதின் பொருட்கவி,

க. சிலுவை சுமந்தோனாக
   உம்மைப்பற்றி வருவேன்
ஏழைப் பரதேசியாக
   உம்மிற் பூர்த்தியடைவேன்
லோக செல்வம் மாட்சிமையும்,
   அற்றுப் போகும் : விரும்பேன்,
நித்த மோட்சமே என் செல்வம்
   அதை நம்பிக் களிப்பேன்.

உ. லோகம் என்னைப் பகைத்தாலும்.
   யேசு அன்பு வைப்பாரே,
மாந்தர் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயம் ஈவார் யேசுவே,
தேவ அன்பால் சூழப்பட்டு,
தேவ சாயல் பெற்றோனாய்
இனஞ், சனம், யாரும்விட்டு
மோட்சம் போவேன் களிப்பாய்.

௩. லோக கீர்த்தி செல்வம் போகும்,
நிந்தனையும் நீங்குமே,
தேவ தொண்டில் ஆறல் ஆகும்
தெய்வ தயை எவுமே.
உம்மை அப்பா பிதாவென்றும்,
சொல்லி நித்தம் நம்பினேன்.
புசல் மோத, மின்னல் வீசும்,
பயமில்லைப் பற்றுவேன்.

௪. லோக தொல்லை என்னைச் சூழ்ந்தும்,
புகலிடம் நீர்தானே,
பார துன்பம் மேலே வந்தும்
மோட்சம் வரும் நிசமே.
தேவ அன்பு நெஞ்சிலூறும்
துக்கம் நயம் ஆகுமே.
இன்பம் உம்மாலன்றி வந்தும்
அந்த இன்பம் துன்பமே.

௫. நெஞ்சமே பிதாவின் நேசம்,
உற்றுப்பார் பின்னில்லாதே
தீமைதன்னைத் தினம்வெல்லும்
எத்தனுண்டு, தூங்காதே.
உள்ளத்தில் உன் யேசுநின்று
தேவ அன்பைச் சொரிவார்.
உனக்காகச் சீவன் விட்டு,
செய்தமீட்பை உற்றுப்பார்.

௬. விசுவாசம் ஊக்கங்கொண்டு
மேலும். மேலும், ஏறுவாய்
நித்தமோட்ச சோதிகண்டு
தேவ அன்பில் களிப்பாய்
யேசுநாதரோடே வாழ்ந்து
கீர்த்தியாடித் துதிப்பேன்
குறைவில்லைப் பூர்த்திபெற்று
சுகானந்தம் அடைவேன்.

என்ற கீதத்தை முற்றும் பாடி முடிந்தபின் போய் மறுபடியும் தன் ஆசனத்தில் உழுக்கார்ந்தான். அதைக் கேட்ட மாத்திரத்தில் அந்த மண்டபத்தில் உழுக்கார்ந்திருந்தவர்கள் யாவரும், இதுவே சத்தியம், இதுவே உச்சிதமென்றுணர்ந்து ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்தார்கள். பிதாவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தவைகளைக் கண்டமாத்திரத்தில் பெருங்குரலெடுத்து விம்மி, விம்மி, அழுதான். மற்றவர்கள் ஒருவர் பின்னொருவராய் அந்த மண்டபத்தைவிட்டு அகன்றுபோனார்கள். பிதாவோ அந்நேரம் முதற்கொண்டு கிறிஸ்துமார்க்கத்தின் விடாப்பிரியம்வைத்து, தன்னையுந் தனக்குள்ளயாவையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தான். மரிக்கும்பொழுது தானெழுதிய மரணசாதனத்தில் கிறிஸ்துமார்க்கம் விருத்தியடையும்படி ௫000 ம் பவுண் கொடுத்தான்.

L. S.

## HINDUISM DELINEATED AND REFUTED

## இந்து சமய ஆராய்ச்சி.

### 5 th. In the Origin of the Hindu gods.

### ௫வது. திரிமூர்த்திகளின் நடபடி.

(தொடர்ப.)

சிவன் சுடுகாட்டில் எலும்புகளை அணிந்து, சாம்பலைப்பூசி, வெட்டிச்சியாகிய நீசப்பறைச்சியுடன் விபசாரமார்க்கமாய்க் கூடி, ஆனையேறும் பெரும்பறையோன் திருநாளுக்குப் போவான் என்னும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றாரென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுவா தேவனுக்குரிய செய்கை. இவ்வகையான சரித்திர சம்பந்தமாய்த் தேவ நாமத்தைக் கூறுவதும் தோஷமல்லவா ?

சிவன், ஒரு நுலுக்கப்பெண்ணின் புருஷன் இறந்துபோக அவனுடைய ரூபத்தை எடுத்துத் நுலுக்கப்பெண்ணைத் தனக்குப் பெண்ணாக்கி அனுபவித்தாரென்று, ௬௪ ம் திருவிளையாட்டில் சொல்லியிருக்கின்றது. அருவருப்பான விளையாட்டு இருவுக்குண்டா ? ஐயோ ! இதுவா தேவலட்சணம். இவர் பெண்டாளும் தேவனேயன்றி, அடியவர் கொண்டாடத் தேவனல்லவே.

சிவன் ஆதபரிஷி பத்தினியோடு விபசாரக் கிரியை நடப்பிக்கையில் அவ்விரிஷி தற்செயலாகக் கண்டு சபிக்கலிங்கமாக மறுரூபமானாராமே. இதென்ன பரிகாசமும் அவமானமுமாயிருக்கின்றது.

சிவன் ஒரு வேட்டுவப்பெண்ணை இச்சித்து அவள் வீட்டுக்குப் போனபொழுது, குறுக்கிட்ட வேடன் காலால் உதைபட்டாரென்று வசவப்புராணத்திலும், பிறவற்றிலும் சொல்லியிருக்கின்றது.

சினேகிதா, இதுதானோ சிவனுக்கு வேலை. கெட்டி, கெட்டி !

சிவன்முதலிய மும்மூர்த்திகளும் மும்முலைத்தாடகை என்பவளைச் சேர்ந்தாரென்றும் மூவர் தலையென்கிற ஓர்பிள்ளை இவருக்குப் பிறந்ததென்றும் அப்பிள்ளையை நட்சத்திரமாகிய துருவன் ஓர் காற்றைப்போலவந்து வாரிச் சமுத்திரத்திலே வீசிவிட்டானென்றும் அது வேடன் என்கிற ஓர் மட்சமாகச் சமுத்திரத்தில் திரிகின்றதென்றும், கிரிகடுகத்திலும் பிறவற்றிலும் சொல்லியிருக்கின்றது. இதென்ன விபரீதம் !

சிவனானவர் ஒருமுறை காளியுடனே கூத்தாட விஷ்டுணு முட்டுக்காரனாகவும் பிரமா நட்டுவனாகவும் [illegible] தேவர்யாவரும் வேடிக்கை பார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ந்துக்கொண்டிருந்தாரென்றும் அப்பொழுது காளியானவள் சிவனை மிஞ்சியாடினதைச் சிவன் கிரகித்து அவளை அவமாய்க் கெலித்தற்பொருட்டுத் தன்காலை அந்நிறைசபையிலே சிரசளவும் உயர்த்தி ஆடித் தன் நிருவாணத்தைத் தோற்றுவிக்க, அவள் நாணித் தலைகுனிந்து சிவனுக்குத் தோற்றாளென்று, கூசம் திருவிளையாட்டில் சொல்லியிருக்கின்றது.

இந்துக்களே, துராசாரம் நிறைந்த இச்சரித்திரங்களை நம்பிக் கண்ணீர் சொரிய, மெய் புளகிதங்கொள்ள வாசித்தும், கேட்டும், கீர்த்தித்தும், மகிழுகிறது என்ன மடமை. ஆவிடையாரை அதிஷ்டித்தாலும், லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்தாலும், அவற்றிற்கு அபிஷேக நைவேத்தியம் செய்கிறோம், அஷ்டாங்க பஞ்சாங்கமாய் அவற்றை நமஸ்கரிக்கிறோமென்று அசங்கியமானவைகளை வெட்கமின்றி ஆராதிக்கத் துணிந்த உமக்கு இச்சரித்திரங்கள் எவ்வளவு அருவருப்பானவைகளாய்த் தோற்றும்! தோன்றாததினாலல்லவோ உங்கள் கண்களில் இருக்கின்ற உத்திரத்தைச் சட்டைபண்ணாமல் பிறசமயிகளுடைய கண்களில் கதிரெழுதுகள் உண்டோவென்று தேடித் திரிகிறீர்கள். ஒட்டகத்தை விழுங்கிக் கொசுகுக்கு வடிகட்ட யோசிக்கிறீர். இன்னும் எடுத்துக் காட்டுகிறோம். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

சிவனானவர் பற்பமாசூரனுக்குத் தொட்டதெல்லாம் பஸ்பமாகும்படி வருவதறியாமல் வரங்கொடுக்க, அவன் இச்சிவனை தொடும்படி தொடர்ந்தபொழுது ஐவேலிக்காயில் ஒழித்தாரென்றும் அப்பொழுது மோகினி வேஷந்தரித்துவிஷ்ணுவானவர் அவ்வசுரனை மோசம்பண்ணினாரென்றும் அம்மோகினிரூபத்தைக் கண்ட சிவன் மயலாகி ஆண்புணர்ச்சியிற் பிரவேசிக்க, அதிலிருந்து கையனாராகிய ஐயனார் பிறந்தாரென்றும், கந்தப்புராணம் மாசாத்தப் படலத்திலும் வைஷ்ணவ நூல்களிலும் சொல்லியிருக்கின்றது. சிநேகிதரே, சருவஞானம், சருவவல்லமை, தூய்மை முதலிய தேவலட்சணங்கள் இவருக்குண்டென்று இன்னும் வாதுகூறுவீரா?

மேலும் உங்கள் சிவனுக்கு ஒருமுறை பிரமகத்திதோஷம் பிடித்ததென்றும், தாசிவீட்டுக்குத் தூதுபோனாரென்றும், பன்றியாய்ப் பிறந்து பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்தாரென்றும், தன் மனையாளையும். தன் ஆயுதத்தையும் இதாகிதம் அறியாது இராவணனுக்குக் கொடுத்தாரென்றும், பாணனென்னும் ஒருவனுக்கு புல்லுக்கட்டும் ஒரு வெட்டியானுக்கு விறகுகட்டுச் சுமந்தாரென்றும், பெண்சாதியாகிய பார்வதியைச் சலேந்திரன் எடுத்துக்கொண்டுபோய்ச் சமுத்திரத்தில் ஒழித்துவைக்க ஏமாந்திருந்தாரென்றும், தெய்வேந்திரனோடு சண்டைபண்ணி அவன் கைவாளால் வெட்டுண்டாரென்றும், சூதாடிப் பொய்சொன்னாரென்றும், தாருகாவனத்திற்போய் அங்குள்ள இருஷிபத்தினிகளைக் கற்பழித்து, அவரிட்ட சாபத்தினால் இவருடைய லிங்கம் அழுகிவிழுந்ததென்றும் வேறொருமுறை கௌதம இருஷியிட்ட சாபத்தினால் லிங்கமும் ஆவிடையாரும் அற்றுவிழுந்ததென்றும், அத்திரி மகாமுனியின் பத்தினி அனுசூயையை இச்சித்து மும்மூர்த்திகளும் பிச்சைகேட்கும்படி அவளிடம் வந்து தமக்கு நிருவாணமாக வந்து பிச்சையிடும்படி அவளைக் கேட்கும்போது, இம்மூவரையும் அவள் குளந்தைகளாகச் சபித்து, சிலகாலம் பால்கொடுத்து வளர்த்தாளென்றும், கெண்டகியென்னும் வேசியிடத்தில் மும்மூர்த்திகளும் கவனம்பண்ணியபொழுது, அவ்வேசி இம்மூவரையும் கற்களாய்ச் சபித்தாளென்றும், [illegible]சூரனென்னும் இராட்சதனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய வாயிற் காவற்காரனாய் சிவன் அனேககாலம் இருந்தாரென்றும், இன்னும் இந்துமத நூல்களிலே பற்பல இளிவான காரியங்களை நடப்பித்தாரென்றும், சொல்லியிருக்கின்றது.

சிநேகிதரே, அன்னிய பொருளை அபகரித்து அன்னமிட்டவர் பெண்ணைக் கன்னமிட்டு கொலை களவு சூது நடப்பித்து, வலைச்சி, புலைச்சி, வண்ணாத்தி, வேடுவிச்சி, துலுக்கிச்சி, இருஷிபத்தினி முதலியோரைச் சோரஞ்செய்து துரோகம் நடப்பித்த இவரையா பரம்பதியென்போம். சர்வசண்டாளனாகிய இவரைத் தரிசிப்பதும் துரோகமாமே.

இந்துக்களே, உங்கள் திரிமூர்த்திகளுடைய நடபடிகளைமாத்திரமல்ல, சுப்பிரமணியர் முதலிய எத்தேவரின் சரித்திரங்களையும் வாசித்துப்பார்த்தால் சகலபாவங்களையும் அவர்கள் நிறைவேற்றினார்களென்பதும் விசேஷமாக விபசாரமே அவரைநிழலைப்போலத் தொடர்ந்துதிரியும் குரூரபாவமென்பதும் வெளியாயிருக்கின்றது. இப்பாவ சரித்திரங்களினாலே உங்கள் நூல்கள் நிறைந்து வழிகிறதுமன்றி, தொண்டர்கள் தங்கள் தோத்திரப் பாடல்களிலும் ஸ்திரி விநோதங்களையே அவருக்கு முகஸ்துதியாக்கிக் கீர்திப்பார்கள். நீங்கள் வணங்கும் விக்கிரகங்கள், இத்தீச்செயல்களுக்குச் சாதனங்களாகிய ஆவிடையும் லிங்கங்களுமாமே. இப்பிரதிமைகளால் நீர்குறிக்கும் மூர்த்திகளும் துராசாரராகிய சிவன்முதலிய இம்மூர்த்திகளே. இப்படி நீர் சாற்றுவதும் இவர்கலையாயிற்று. சாதிப்பதும் இவர்தொழிலாயிற்று. போற்றுவதும் இத்துராசாரரின் பாதமாயிற்று. ஐயையோ! இந்துக்களே, நீங்கள் இனி உய்யும்வழி எங்கே!

## 6th. In the plan of salvation ! ! !

## ௬ வது இரட்சிப்பின் வழி.

சினேகிதரே, ஆன்ம ஈடேற்றமே நமக்கு அவசியமானதாலும், மெய்நான்மான்மியம்மும் இதனாலே துலங்கவேண்டியதாகையாலும், இந்து சமயங்களும் அதன் பற்பல நூலும், தமிழ் ஞானிகளும் இவ்விசேஷ போதனையிலே மோசம்போகிறதினாலும், யாவரும் அத்தியந்த கவனத்தோடு சிந்திக்கவேண்டிய முத்திப்பேறைப்பற்றி ஆராயப் புகுமிடத்து இந்துசமய நூல்களோ விளையாட்டுப்போல அதைப் பேசி, வீண்சம்பவங்களைப் பிதற்றியிருப்பதைக் கவனித்து மெய்வழியைக்கண்டு பிடிப்பதே விவேகிகளுக்குத் தகுதியாயிருக்கிறது. காசிகாண்டத்திலே, திருடவந்த திருடன் வெளிச்சந் தெரியும்படி மங்கி எரிந்த திரியைத் தூண்டிவிட்டதனால் மறுபிறவியிலே இராசகுமாரனாகப் பிறந்து, பின்பு பூருவ சென்மவினைத் தொடர்பால் சிவாலயங்களில் விளக்கேற்றி, அட்டபாலகரில் ஒருவனும், அரனது தோழனுமாகிய குபேரனானான் என்று சொல்லியிருக்கின்றது.

அருணாசலப் புராணத்தில், ஓர் பெருச்சாளி கோவிலின் மூலையைக் கிளறும்பொழுது, அதினுள்ளிருந்த ஓர் இரத்தினம் வெளிப்பட்டு ஒளி வீசினதைச் சிவன் பார்த்து, அதைத் திருவிளக்கேற்றினதாக மதித்து, அதற்கு மோட்சபாதையுங்காட்டிச் சாலோகபதவியும் அருளினார் என்று சொல்லியிருக்கின்றது.

மறைசைப்பதிற்றுப் பத்தந்தாதியிலும் பிறவற்றிலும், வேதாரணியத்தில் சிவசன்னிதியில் ஏற்றிவைத்திருந்த ஒருவிளக்கு அணைகிற தருணம்பார்த்து அதிலிருந்த நெய்யைக் [illegible] எலியின் மூஞ்சியால் அத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலங்கி எரிந்ததைச் சிவன் கண்டு, சந்தோஷித்து அதற்குத் தரிசனைகொடுத்து, மூவுலகங்களையும் ஆளும்படி மாவெலிச்சக்கரவர்த்தியாய்ப் பிறக்கும்படி வரங்கொடுத்தார் என்று சொல்லியிருக்கிறது.

மதாசாரங் குலாசாரங்களினின்று வழுவி ஓர்கைக்கொள்ள மனைவியையும் கவர்ந்துகொண்டு வனசஞ்சாரம்பண்ணிப் புலியினால் பீறுண்டிறந்த ஓர் பாதகப்பிராமணன் இரவுரவநகரத்திலிருந்து வருந்துகையில், இவனுடைய இடக்காலின் எலும்பை இரையாகக்கொண்டு பறந்த ஓர் கழுகின் வாயினின்று வழுவி அவ்வெலும்பு கங்காநதிக்குள் விழுந்ததினால், சிவன் அப்பிராமணனை நரகத்தினின்று கரையேற்றித் தமது புஷ்பவிமானத்தில் ஏற்றுவித்து நாகலோக பதவியிற் சேர்த்தாரென்று காசிகாண்டத்தில் சொல்லியிருக்கின்றது.

தாம்பிரவன்னி மகத்துவத்திலே, ஓர் வேடனும் அவன் துரத்திவந்த பன்றியும் தவறி அந்நதியில் விழுந்து இறந்ததனால் பன்றிக்கும் வேடனுக்கும் கைலாசம் கிடைத்ததென்று சொல்லியிருக்கின்றது.

திருவையாற்றுப் புராணத்திலே, தன் தகப்பனின் மனைவியைத் தனக்கு வைப்பாட்டியாக வைத்திருந்த ஒரு கொடிய சண்டாளனானவன் தன் தகப்பனையுங் கொன்று, அதைக் கடிந்துகொண்ட தன் சகோதரனையும் வதைத்துப் பயித்தியகாரனாகி, ஒருநாள் காவேரியின் கரையோரத்தில் படுத்திருக்கையில், ஒரு ஆர்த்த ஸ்திரி தப்பிய அழுக்குச்சீலையின் திவலை இவன்மேற் தெறித்ததினால் பைத்தியம் நீங்கி சுபுத்தியடைந்து அந்நதியில் சருவாங்கஸ்நானஞ் செய்தானென்றும், அதுகண்டு சிவன் எழுந்தருளிவந்து கைலாசபதவியை அவனுக்குக் கட்டளையிட்டாரென்றும் சொல்லியிருக்கின்றது.

பிரமோத்திர காண்டம் விபூதிமான்மியத்தில், பஞ்சபாதகங்களும் இடைவிடாமல் நடப்பித்து, பாவகிருத்தியத்தால் ஆதாயம்பண்ணிய திரவியத்தை வேசிகளுக்குக் கொடுத்துக் காமதூர்த்தனாய்த் திரிந்த ஓர் பிராமணன் ஒரு இரவில் ஓர் புலைமகளுடன்சையோகிக்கையில்அவள் கணவன் கண்டு, இவனை வாளினால் வெட்டி வேலிக்கப்பால் வீசிவிட, பசியினால் வருந்திச் சாம்பல் மேட்டிற்கிடந்த ஓர் நாய் அப்பிரேதத்தைச் சமீபித்து, அதில் எலிச்கடித்து இழுத்து அம்மாமிசத்தைத் தின்கையில் அதின் காலிற்படிந்த சாம்பர் அப் பிரேதத்தின்மேல் புரண்டதென்றும், அதனால் அவன்செய்த பாதகங்கள் நீங்க, சிவகணங்கள் இவனைப் புஷ்பவிமானத்திலேற்றிச் சிவலோகத்தில் கொண்டுபோய்விட்டார்களென்றும் சொல்லியிருக்கின்றது.

உபதேசகாண்டம், உருத்திராட்ச மான்மியத்தில் ஒரு காக்கை தன் மூக்கினாற் கல்விப்போன ஒரு உருத்திராட்சமாலையானது, ஒரு கொடும்பாதகனுடைய பிரேதத்தின்மேல் வழுவி விழுந்ததனால் அவனுக்குப் பாவ நிவாரணமுண்டாக அவன் கைலாசபதவி அடைந்தானென்று சொல்லியிருக்கின்றது.

மேற்படி நூலிலே, பாதக சிரோமணியாகச் சீவித்து மரித்து நெடுங்காலமாக யாதனையில் கிடந்து அழுந்திய ஓர் அரசனது புத்திரன் மணலைக் குவித்துச் சிவலிங்கமென்று விளையாடின வீண் ஆட்டில் சிவன் பிரீதியாகி, நரகத்தில் வருந்திய அவன் பிதாவுக்குக் கைலாசத்தைக் கட்டளையிட்டாரென்று சொல்லியிருக்கின்றது. இன்னுங் கூடற் புராணங்கேட்டு நாரைப்பட்சி நந்திக்கணங்களுடன் சிவலோகத்தில் வாழ்ந்ததென்றும், திருடிய பிரசாதத்தின் ஓர் அவிழ் பார்ப்பான் வாயில் தவறிவிழுந்ததினால் ஒருகாகம் முத்தியடைந்ததென்றும், சிவராத்திரியில் திருடப்போன நாயானது, தொடர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கஞ்சிப் பயத்தினால் கோவிலைச் சுற்றிவந்ததினால், யாத்திரை, பிரதெட்சணம், தரிசனையாகிய இவை முதலியவற்றால் வரும்பேறு அந்நாய்க்கு லபிக்க, அது இராசனாகப்பிறந்து கடைசியில் மோட்சம்பெற்றதென்றும், மிருகத்திற்கஞ்சி விழிப்பிருந்த வேடனுக்குச் சிவகிசிப்பேறு கிடைத்ததென்றும், வேசிவா தாசிவா என்று தன்தாயை அழைத்துவந்த மாபாதகனுக்கு, சிவா, சிவா என்று தொனித்ததினால் சிவ பதவி கிடைத்ததென்றும், அரிசி வசம்பு கூறிவிற்றுத் திரிந்தவனுக்கு அரி என்று தொனித்ததினால் வைகுந்தப்பேறு கிடைக்கவேண்டுமென்றும், சிவசம்பு என்று தொனித்ததினால் கைலாசபதவி கிடைக்கவேண்டுமென்றும் வாக்குவாதம் நடந்ததென்றும், இரவில்மாவேன் என்ற கருத்தில் இராமாவேன் என்று சாவிறுதியில் வினவினவனுக்கு வைகுந்தம் கிடைத்ததென்றும் பலபேதப்படச் சைவ வைஷ்ணவ நூல்களில் கூறியிருக்கின்றது.

சிநேகிதரே, சத்தியராகிய தேவன் மனுரட்சைக்குச் சத்தியமான வழியையல்லவா ஏற்படுத்தியிருப்பார். சத்தியம் மனத்தாலும் வாக்காலும், கிரியையாலும் பிசகினோர்க்குமோட்சங்கிடைத்தது எங்ஙனம்.

சொல்லப்பட்ட இவ்வேழு காரியங்களாலும், பிறவற்றாலும் தேர்ந்து இந்துசமய நூல்கள் மெய்த்தேவனால் ஆன்மாக்கள் ஈடேறும்பொருட்டு அருளிய நூல்களல்லவென்றும், அவைகள் அறிதியிடும் தேவர் மெய்த்தேவனாகாரென்றும் இந்நூல்களில் இரட்சாபோதனையுண்டென்று நம்புதல் மண்குதிரையை நம்பின சீலமாகுமென்றும், உய்த்துணர்ந்து சத்தியநூலைக்கண்டு சத்தியவழியில் நடக்கத் தீவிரிப்பீராக.

அவ்வழியை நீங்கள் அங்கிங்கல்லச் சுத்த சத்திய கடவுளினால் அருளப்படும் மெய்நூற்குரிய அகச்சாட்சி புறச்சாட்சியாவும் பூரணமாய் அமைந்து விளங்குகிற சத்திய வேதநூலாகிய விவிலிய புத்தகத்தில் தெளிவாய்க் கண்டுகொள்வீர்களாக. காலமும் இடமும் நமக்கு வாய்க்குமேயானால் அந்நூலிலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிற இரட்சிப்பின் போதனையை பின்வரும் புத்தகத்திலே தேவ உதவியைக்கொண்டு எழுதி அறிவிப்போம்.

E. H.

Humility:—தாழ்மை.—கிறிஸ்தவனுக்குரிய தாழ்மை, அவனுடைய பார்வையிலும், பேச்சிலும் விளங்கும். "இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்" அகந்தையான, அல்லது நிந்தையான பேச்சு, தாழ்மையின் பேச்சல்லவே. தாழ்மை, தன்னளவிற்றானே மிக விரும்பப்படத்தக்கது. நீயும் அதை அப்படி மதிப்பாயாக. அதொரு ஆபரணம். அதின் மாட்சிமையை உற்றுணரக் கற்றுக்கொள். அதில் நேசம்வை. அதற்காகப் பிரார்த்தி. உன் பெருமையைத் தாழ்மையாய்த்திருப்பும்படி ஆவலோடு ஆண்டவரைப்பார்த்து மன்றாடு. அவர்மாத்திரமே அதை மாற்றக்கூடும். தாழ்மையை அப்பியாசம்பண்ணு. உன்னைக் கீழ்மையாயும், பிறரை மேன்மையாயும் நினை. தாழ்மையினால் உன்னைப் போர்த்துக்கொள். தாழ்மையில் எவ்வளவாய் அதிகப்படுகிறாயோ, அவ்வளவாய் கிறிஸ்துவுக்கொப்பாவாய் எவ்வளவாய்க் கிறிஸ்துவுக்கொப்பாகிறாயோ அவ்வளவாய்த் தேவனால் நேசிக்கப்படுவாய்.

P. Henry.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## EDUCATION

## கல்விப் பயிற்சி.

[முந்தின பத்திரிகையிற் பேசப்பட்ட காரியம் இடக்குறைவினால் முடிவாகவில்லை, உபாத்திக்கும் மாணாக்கருக்குமிடையே நடந்த சம்பாஷணை நடுவிற் பிரிவுபட்டிருப்பதால் வாசிப்போர் அதையுமிதையுஞ்சேர்த்து வாசிப்பது அவசியம்.]

"என் ? இப்பழக்கத்தை விட்டுவிடுவோமென்று மெய்யாய்த் தீர்மானிப்பீர்களாகில் அதை விட்டுவிடுகிறது கூடாத காரியமா" என்று வினாவியதற்குச் சிலர் "இல்லை" என்று அனுங்கிச் சொன்னார்கள்.

"அதை விட்டுவிடுவோம் என்று தீர்மானித்தாலும் நெடுகிலும் வாடிக்கைப்பட்ட பழக்கமாயிருப்பதினால் அதை மேற்கொள்ளுகிறது இலகுவான காரியமல்லத்தான். நல்லதும் பொழுது போய்விட்டது நான் உங்களை நெடுகிலும் மறித்துக்கொண்டேன். இப்பொழுது நீங்கள் வீட்டுக்குப் போகலாம். நீங்கள் பண்ணப்போகிற தீர்மானத்தை மீறாதபடிக்குச் சரியாய் உங்கள் நிண்ணயத்தைக் காத்துக்கொள்ளத்தக்கதாக என்ன உபாயஞ் செய்யலாம் என்பதின்பேரில் என் மனதைச் செலுத்தப்போகிறேன்" என்றுசொல்லிப் பிள்ளைகளை அனுப்பிவிட்டான்.

உவாத்தியாருடைய முகக் குறிப்பினாலும் மற்றும் பேச்சுகளினாலும் குற்றஞ்செய்த பையனைத் தண்டிக்கிறது அவருடைய பிரதான கருத்தல்ல. இத்தீமையை நமது பள்ளிக்கூடத்திலிருந்து வேரறக் களைகிறதே உவாத்தியாருடைய அபிப்பிராயம் என்பது தங்கள் மனதில் விளங்கிக்கொண்டுபோய்விட்டார்கள்.

மறுநாட்காலமே பிள்ளைகள் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்ததின்மேல் உவாத்தியார் தம்மனதில் ஆலோசித்துக் கண்டுபிடித்த சில விதிச்சட்டங்களை அவர்களுக்கு முன் கொண்டுவரப் பிள்ளைகளும் அவைகளைக் களிப்போடு அங்கிகாரம்பண்ணினார்கள். சிலகாலத்துக்குள்ளாக அப்பள்ளிக்கூடத்தை விட்டுத் தூஷணம் ஆணையிடல் முதலான தீமையேதும்இல்லாதுஒழிந்துபோக எதுவாயிருந்தது.

மேற்சொல்லிய இச்சங்கதியை வாசிக்கும் உவாத்திமார் இம் முன்மாதிரியைப் பின்பற்றுவது தருமென்று வியந்து புகழ்ந்து சொல்லுகிறோம். உவாத்திமார் தங்கள் கண்காண அல்லது காதுகேட்கச் சம்பவிக்கிறதாகிய ஒரு குற்றத்தைமாத்திரம் காவிக்கொண்டு அக்குற்றத்தைச் செய்தவனைப் பயமுறுத்துவதினாலே அல்லது தண்டனை செய்வதினாலே அத்தீமையைப் பரிகரிக்கும்படி தேடாமல் இத்தீமை ஒருவனில் மாத்திரமோ அல்லது எல்லாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பற்றியிருக்கிறதோ என்று கவனமாய் ஆலோசித்து அதை முற்றாய்ப் பள்ளிக்கூடத்திலிருந்து நீக்கவும் எல்லாருக்குள்ளும் ஒழுக்க நெறியை உண்டாக்குவதற்கு உபயோகமான வழிவகைகளையாவது விதிகளையாவது கண்டுபிடித்து அவைகளை நாட்டவும் பிரயாசப்படுவதே உபாத்திக்கு இருக்கவேண்டிய இலக்கணமாம்.

W. W. H.

## A CHRISTIAN CONVERT AT CALCUTTA.

## கற்குத்தாவில் மனந்திரும்பிக் கிறிஸ்தவளானவளைப் பற்றியது.

கற்குத்தாவிலிருக்கிற மிசியோனரிமாரால் எழுதப்பட்ட பின்வரும் நிருபங்கள், பூரண மனதுடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு வெளியரங்கமாய் அவரை அறிக்கையிட விரும்புவோர், அவர் நாமத்தினிமித்தஞ் சிலவேளை எவ்வகைத் துன்பங்களைச் சகிக்க நேரிடுமென்பதை அறிவிக்கிறபடியால், வாசிப்பவர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்குமென்று நம்புகிறோம்.

இதில் முதல்நிருபம் கனம். வேர்க்கன், (Rev J Vaughan) என்பவரால் எழுதப்பட்டது. அதுவருமாறு :—

“பிரமோ சங்கத்தவர் வெளிப்பேச்சளவில் உத்தமராய்த் தோற்றினும், அவபத்தி வைராக்கியமுடைய இந்துக்களைப்போலவே கிறிஸ்துமார்க்கத்துக்கு முழு விரோதிகளாய் இருக்கிறார்களென்று முன் சொல்லியிருக்கிறேன். இக்கருத்து எவ்வளவு சுறுக்கில் திருஷ்டாந்தமாகுமென எனக்கு அப்போது புலப்படவில்லை. பின்வருஞ் சம்பவம் அதை உறுசுப்படுத்துகின்றது.— நாலு வருஷங்களுக்குமுன்னே எங்கள் மிசியோனால் ஏற்படுத்தப்பட்ட அந்தப்புர உபாத்தியாயிகள் கெரூப் சண்டசென், என்பவருக்கு இளமான பெண்களைச் சந்தித்துப் போதித்து வந்தார்கள். அதினால் இரண்டுவருஷங்களுக்குமுன் அவர்களில் இரண்டு விதவைகள் கிறிஸ்து விசுவாசிகளாயினர். அவர்கள் இருவரும் ஞானஸ்நானம் பெறும்படி நம்மிடம் வர, பல மாசங்களாய் விரும்பினர். மூத்தவள் அதைரியமும் விசுவாச பெலவீனமுமுள்ளவளானதினால் மற்றவளையுந் தாமசப்படுத்தினாள். என்றாலும் ஆறு வாரங்களின்முன் இளையவள் என்னிடம் வர நான் அவளைப் பரீட்சித்து, வேத அறிவில் தேறினவளும், உண்மையும், அவாவுமுள்ளவளாய் இருக்கக் கண்டேன். காரியங்களைத் தீர்க்க யோசனையோடு செய்வது என் போக்காகையால் அந்நேரம் நான் அவளுக்கு ஞானஸ்நானங் கொடுக்கவில்லை! அவளோ ஆறுதலற்றவளாய், தன் அக்காள் சிறுவனைய எடுத்துக்கொள்ள விருப்பற்றிருந்தும், தான் தனிமையாயாகுதல் எங்களிடம் வரத் தீர்மானித்து, ஒன்பதுநாட்களுக்குமுன், உலகத்தில் தனக்கருமையாயிருந்த யாவையுந் தள்ளிவிட்டு எங்களிடம் வந்தாள். யாதொரு வகையாயேனும் நம்மால் தூண்டப்படாமல் தானே தனிமையாய் வந்தாள். உடனே அவளைத் திருப்பிக்கொண்டுபோக அவளுடைய சுற்றமித்திரர் நிர்ணயித்துப் பிரயத்தனஞ்செய்தார்கள் ஆகையால் ஞானஸ்நானங் கொடுப்பதைப் பின்னுஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலதினங்களுக்குப் பின்போட்டு, அவர்கள் அவளைச் சந்தித்து, பலபந்தமின்றித் தங்கள் செல்வாக்கைச் செலுத்திப் பார்க்க இடங்கொடுத்தேன். அவர்களின் சந்திப்பு அவளுக்கு ஓர் பயங்கர சோதனைதலுடனையாயிற்று. நாளுக்குநாள் காலைதுவங்கி மாலைவரைக்கும், வேண்டினை, அச்சுறுத்தல், வாக்குத்தத்தமென்னும் பாணங்களைப் பிரயோகித்தார்கள். மரித்தோரினின்று மித்தங் கதறும்வண்ணம் அவள் மாதா அவள் கையைப் பிடித்துக்கொண்டு வீரிட்டழுதபொழுது அவள் மனநிலை எப்படியாமோ என ஐயுற்று நடுநடுங்கினேன். அவளும் அழுது நடுங்கினாள். ஆனால் எந்த அஸ்திர சஸ்திரப் பிரயோகத்தினாலும் அழியாத நிலைபெற்ற கிருபைச்சட்டை அவளுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. தனவானான ஒரு நாயகனை விவாகம்பண்ணித் தருவோமென்று அவர்கள் சொன்னதற்கு எனக்கு நாயகன் வேண்டியதில்லை; நீங்கள் வாக்குப்பண்ணும் பொருளொன்றையும்பற்றி எனக்கு அக்கறையில்லை: என்னாத்தும இரட்சிப்பொன்றே எனக்கு வேண்டிய பொருளென்று உறுதியாய் உத்தரஞ் சொன்னாள்.

அவளுடைய உறுதிப்பாட்டின் அளவாய் அவர்கள் மூர்க்கம் அதிகரித்து, கடைசியாய், அவளுடைய வயோதிப மாதா எங்களிடம் வந்து, "அவள் சகோதரர் அவளை ஞானஸ்நானம் பெற விடுவதிலும், தங்கள் உடுப்புக்குள் ஒரு கத்தியை மறைத்துப்போய் அவளைக் கொன்றுபோடுவது உத்தமமென யோசித்திருக்கிறார்கள், ஆதலால் அவர்களை உள்ளேபோக விடவேண்டாமென்று சொன்னார். இதற்குப்பின் பிரமோசர் இதுகாரியத்தைப்பற்றிப் பிராதுகொண்டு வருவோமென்று பயமுறுத்தினார்கள். இதற்கிடையிலெல்லாம் தனக்கு ஞானஸ்நானந் தரும்படி அப்பெண் என்னைக் கேட்டுக்கொண்டாள். ஆதலால், இன்னும் பின்போடுவது அபிரயோசனமும், அவிவேகமுமென நினைத்ததினாலும் அவள் தன் விசுவாசத்தை அனேகருக்குமுன்பாக அறிக்கையிட்டதினாலும், அவளுடைய யதார்த்தத்தைப்பற்றிச் சந்தேகிக்க ஏதுவில்லாததினாலும், மூன்றுநாட்களுக்குமுன் அவளுக்கு ஞானஸ்நானங் கொடுத்தேன். இச்செய்கை எச்சந்தடிகளையுஞ் சமாப்தியாக்குமெனக் காத்திருந்தோம். அவள் சுற்றத்தவர் இந்துக்களாய்மாத்திரம் இருந்தால் அப்படியாகும்.

ஆனால் பிரமோசராகையால் "அவள் கிறிஸ்தவளாய் இருக்கப்படாது. திரும்பவும் அவளை எங்கள் வசமாக்குவோம்" என்றார்கள். "இன்றுகாலமே, 11 மணிக்கு அவளைக் கோட்டுமுன்பாகக் கொண்டுவரவேண்டுமென்று" நேற்றிரவு 10 மணியளவில் எனக்கொரு கட்டளைவந்தது. கட்டளைப்படி அவளைக் கோட்டுமுன்பாகக் கூட்டிப்போனபொழுது அவள் 17 வயசுள்ளவளாயிருந்தும், "அவள் இளைஞளென்றும், நாங்கள் அவளை அனுப்பினோமென்றும்" பொய்யாய்க் குற்றம்பாரித்து எங்களுக்கு விரோதமாய்ச் சத்தியக்கடதாசி கொடுத்திருந்தார்கள். மேலும் அவளுக்கு விவாகஞ்செய்ய ஒழுங்குபண்ணியிருக்கிறோமென்றும், இன்னும் இப்படிப் பலவாறாக மனதிலெழுந்தபடி பேசிக்கொண்டார்கள். இவைகளெல்லாஞ் சுத்தப் பொய்யென்றவர்கள் நன்றாயறிந்துஞ் சத்தியம்பண்ணப் பின்னிற்கவில்லை. என்றாலும், எங்கள் தரணி இந்தவழக்கை அடுத்த செவ்வாய்க்கிழமை விளங்கும்படி தவணைபோடுவித்தார்.

இவர்களுடைய தன்மையை வெளிப்படுத்த இன்னுமொன்று சொல்லுகிறேன் :—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை ஒரு விவேகியான பிரமோ, பொம் உபேச்சு, என்பவரிடம் போய், சத்தியத்தைக் குறித்து விசாரணைசெய்தான். இவ்வாலிபன் தன் அண்ணனுடன் வாசம்பண்ணி அவனுடைய உத்தியோகசாலையில் வேலைபார்த்துவந்தான் அவனும் இவனைப்போல் பிரமோவாயிருந்தான். மூத்தவன் இளையவனுடைய மனச்சாய்வை மட்டிட்டு, "நீ கிறிஸ்துமார்க்கத்தை விட்டுவிடாதிருந்தால் நான் உன்னைத் தள்ளிப்போடுவேனென்று சத்தியம் பண்ணிச் சபதமிட்டான். ஆனால் இளையவனோ தன் அபிப்பிராயத்தின்படி கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிக்கொண்டான். மூத்தவனோ அவனை மிகுதியும் பயமுறுத்தி, வீட்டையும் உத்தியோக சாலையையும் விட்டுத் துரத்திவிட்டான். இவ்விரண்டும் உண்மையாய்நடந்த சம்பவங்கள். கெருப்பும் அவர் பட்சத்தவரும், "சுயாதீனமாய் நடக்க இடங்கொடுக்கிறவர்கள், யாவையுஞ்சகிக்குங் குணமுடையவர்கள்," என்னும் வீண்பேச்சை இவைகள் நன்றாய்த் துலாம்பரப்படுத்திக் காட்டுகின்றன.

சனங்கள் இவைகளை அறிந்தாற்றான் பிரமோசரிற் றாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், மதிப்பையுங் குறைத்து அவர்களுக்காக அதிகமதிகமாய்ப் பிரார்த்திப்பார்கள்."

இரண்டாம் திருபம் கன. ஸ்துவாட், (Rev. E. C. Stuart) என்பவரால் எழுதப்பட்ட வழக்கு விருத்தாந்தம்:—

"இரண்டுநாட்களுக்குமுன் நடந்த வழக்கு விளக்கத்திலிருந்து இப்பொழுதே வந்தேன்.

பிரமோசமயத்தலைவனாகிய கெருப் சண்டசேன் என்பவருக்கு நெருங்கிய இனத்தவளும், கனிசமான குடும்பத்தைச் சேர்ந்தவளுமாகிய ஒரு இந்திய வாலிப விதவை போனகிழமை சுயவிருப்பத்தின்படி மிசியோன் ஸ்தானத்துக்குவந்து, கடந்துபோன மூன்றுவருஷகாலமாய், தன்வீட்டில் தன்னைச் சந்தித்துப் போதித்துவந்த சுதேச கிறிஸ்த ஸ்திரியுடன் தங்கினாள். தான் தன் விசுவாசத்தினின்று பின்வாங்கும்படி தன் சுற்றமித்திரர் செய்த பிரயத்தனங்களெல்லாம் பிரதிகூலமானபின் தன் விசுவாச சத்திய சாதனையினால் தன் சொந்தவிருப்பத்தின்படிக்கும் கேள்வியின்படிக்கும் ஞானஸ்நானம்பெற்றாள். இது போன புதன்கிழமை சம்பவித்தது. மற்றநாட்காலமே அப்பெண்ணையுங் கூட்டிக்கொண்டு கோட்டுக்கு வரவேண்டுமென்று, அவளுடைய அஞ்ஞான இனத்தார் கனம். வேர்க்கன், (Rev. J. Vaughan) என்பவருக்குப் போன வெள்ளிக்கிழமையிரவு கட்டளைவாங்கினார்கள். கட்டளையின்படி அவர் அப்பெண்ணுடன் கோட்டுமுன்பாகவந்து வெளிப்பட்டு, தான் ஏற்படுத்திய தரணிமூலமாய்த் தவணைகிடைக்கும்படி கேட்டார்.

கோட்டாரும் தவணைகொடுப்பதினால் தவறுவராதெனஅறிந்து நேற்றுவரைக்குந் தவணைகொடுத்தார். பெண்ணின் சுற்றத்தவர் பிரமோசத்தலைவராகையால், பணத்தைப் பணமென்றுபாராமற் செலவுபண்ணி, தங்களுக்காக அனேக நியாயதுரந்தரர்களை ஏற்படுத்தினார்கள். ஆனால், தேவனுக்கு ஸ்தோத்திரம், அவர்களுடைய உபாயதந்திரங்களெல்லாந் தாறுமாறாக, சத்தியத்துக்கு விரோதமாய் அவர்கள் கொண்ட மூர்க்கவெறி அபத்தமாக, தேற்றக்காரரென்று புகழப்பட்ட பிரமோசர், மனிதரின் சுபாவ உரித்து உரிமை சலாக்கியம் யாவுக்கும் விரோதிகளென வெளிப்படுத்தினதேயன்றி மற்றுப்படியல்ல. நியாயாதிபதி தரணியின் வார்த்தைகளைக் கேட்டபின் அப்பெண்ணின் வாய்ப்பிறப்பையும் [illegible] கேட்டறிந்துகொண்டு, "தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க விரும்பும் ஸ்தானம் இதுவெனத் தெரிந்து அவள் போதிய வயசும் விவேகமுமுள்ளவளென்றும், யாதொரு வகையான அழைப்பு, கட்டாயஞ் செய்யப்படவில்லையென்றும் வெளியரங்கப்படுத்தி, அவள் எங்கே வாசஞ் செய்ய விரும்புகிறாளென்பதை யாவருமறியும்படி அவளிடம் கேட்கிறேனென்று சொல்லிக்கேட்டார். உடனே அப்பெண் தன் அஞ்ஞான இனத்தாரிடம் போகமாட்டேனென்று கோட்டுமுன்பாக யாவருமறியச் சொன்னாள். என்றாலும், நியாயாதிபதி தீர்ப்பு எழுதுவதன்முன், அவளுடைய நிர்ணயத்தை மாற்றும்படி தாய் மறுபடியுந் தெண்டித்துப்பார்க்க இருவரும் ஒரு தனியறையில் விடப்பட்டார்கள் ஒரு கிறிஸ்தவனும் அவர்களுடன் நிற்கவிடங் கொடுக்கவில்லை. உடனே விம்மல் பொருமலுந் துக்க அலறுதலும் எங்கள் காதுத்துவாரங்களை அடைத்தன. இப்பேர்ப்பட்ட மனோவேதனையைக் கொடுக்கத்தக்க சம்பாஷணையின் பின் திரும்பவும், கோட்டுமத்தியில்வர அழைக்கப்பட்டாள்.

போனகிழமைவரைக்கும் அந்தப்புரத்தைவிட்டகலாமலிருந்த வாலிப ஸ்திரி. காட்சிபார்க்கும்படி வந்த திரளான சனங்களின் முன்பாக நடந்த சோதனைதண்டனைக்குள்ளானதினால், எவ்வளவு கலக்கமுஞ் சஞ்சலமும் உள்ளவளாயிருந்தாளென்று சொல்லிக்காட்ட வேண்டியதில்லை. எங்கே போகத் தீர்மானித்திருக்கிறாயென்ற வினாவுக்கு, தேவகிருபையினால் உறுதியுந் திடாரிக்கமுமான சத்தத்துடன் "பாத்ரி சாகிப்புடைய வீட்டுக்கு" என்று உத்தரஞ் சொன்னாள். அதைக் கேட்டவுடன் சுதேசிகளுக்குள்ளுண்டான அதிர்ச்சி கொஞ்சமல்ல. கற்குத்தா முழுவதும் பொங்கிக்கொண்டிருந்தது. இதினால் அந்தப்புர ஸ்திரிகளைக் சந்தித்துப் போதிக்கும் வேலை சிலகாலத்துக் கிடையூறடையுமென்பது மெய்தான். ஆனால் மனந்திரும்பிக் கிறிஸ்தவளான இவ் வாலிபப்பெண், உண்மையான தேவபத்தியின் நோக்கமுடையவளாகக் காணப்படுவதினால் உண்டான பெறுபேறு, சுவிசேஷத்துக்கு மகா செயமே. இதற்காக நாம் சந்தோஷப்பட்டுத் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்."

இது மனத் தத்தளிப்புள்ளவர்களையும் அச்சத்தினால் அல்லது பிறவேதுவினால் கிறிஸ்துவை வெளியரங்கமாய் அறிக்கையிடப் பின்னிற்பவர்களையும் தைரியப்படுத்தும்.

விதைக்கப்பட்ட சுவிசேஷ விதையைத் தேவன் ஆசீர்வதிக்கவும், கிறிஸ்துவின் இராச்சியமே எப்பொழுதுஞ் செயமடையவும் நாம் மென்மேலும் பிரார்த்திக்க இது நம்மெல்லாரையும் ஏவுவதாக.

Heavenly Treasure.—மோட்ச பொக்கிஷம். மத், 6: 19–26. "பூச்சியுந் துருவுங் கெடுத்தும், திருடர் கன்னமிட்டுத் திருடியுமிருக்கிற பூமியில். உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் கூட்டிவையாதிருங்கள். பூச்சியாயினுந் துருவாயினுங் கெடுக்காமலும், திருடர் கன்னமிட்டுத் திருடாமலுமிருக்கிற பரமண்டலத்தில் உங்களுக்காகப் பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கேயோ, அங்கே உங்கள் இருதயமுமிருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SUMMARY OF NEWS.

## சமாசாரத் திரட்டு.

Jaffna Religious Tract Society:—யாழ்ப்பாண சன்மார்க்க துண்டுப்புத்தகசங்கம்.—சென்றுண்டு இச்சங்கத்தவர், 1 ஆத்துமநட்டம், 2 உன் இரட்சகரை என் தள்ளுகிறாய்? 3 மத்தியஸ்தர் ஒருவரே, 4 நீ யேசுக்கிறிஸ்துவை வஞ்சிக்கக்கூடாது, 5 உயிர்த்தெழுதல் என்னும் ஐந்து புதிய நற்கொடைகளையும், 1 பொய் பசாசின் காரியம், 2 ஆத்தும சுயமயக்கம், 3 தேவன் மாறுதவர், 4 பெருமை, 5 தேவன் நீதிபரர், 6 பொய்யும் வஞ்சகமும் என்னும் சிறுத்துண்டுகளையும், போனஆண்டுப் பஞ்சாங்கத்திலும் மிக விரிவானதாக இவ்வாண்டுக்குரிய ஓர் தமிழ்ப் பஞ்சாங்கத்தையும், இங்கிலிஸ் பாஷையில் விஸ்தாரமாய்ப் பரம்பி, தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட, "திராட்சப்பழம் உனக்குத் தேவையானால் விலைக்கு வாங்கு" என்னுஞ் சிறு புத்தகத்தையும் பிரசுரஞ்செய்தார்கள். மேலும், "கிறிஸ்தோபகாரி" என்னும் திரி மாதாந்தப் பத்திரிகையையும், ஆரம்பித்தார்கள். இது அனுகூலம் பெற்று வருகின்றது.

Opening a new Protestant Church at Rome:—உரோமையில் கிறிஸ்தாலய ஸ்தாபனம்.—உரோமானித்தார், எவ்விடத்திலும் தங்கள் சுயசமய ஆராதனையை நடத்த உரித்தாடுகிறார்கள். தங்கள் அதிகாரம் மேலாட்டமான இடங்களிலோ உரோமான் சமயத்துக்கன்றி வேறொன்றுக்கும் அனுவளவும் இடங்கொடார்கள். உரோமையில் வசிக்கிற புரோதஸ்தாந்துக் கிறிஸ்தவர்கள் தாங்கள் ஆராதனை செய்வதற்கு ஒரு ஆலயத்தைக்கட்ட அனேககாலமாய் அபேட்சித்தும் தடைப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் தேவாராதனைசெய்வதற்கு உரோமாபுரியை விட்டு வெளியேபோக வேண்டியதாயிருந்தது. தற்காலத்திலோ பாப்புவின் இராசத்துவம் நீங்கிவிட்டதினால் ஒரு கிறிஸ்தாலயங் கட்டப்பட ஏதுவாயிற்று. உரோமாபுரியிற் கட்டப்பட்ட முதற் புரோதஸ்தாந்துக் கிறிஸ்தாலயமிதுவே.

Peace.—சமாதானம்.—பிராஞ்சியருக்கும், சேர்மனியருக்கும் இடையே நெடுங்காலமாய் நடந்த கொரேமும் பயங்கரமுமான யுத்தம் யுத்தத்தளவில் முடிவாயிற்று. ஆனால் யுத்தத்தின் பெறுபேறோ அனேக வருஷங்களுக்கு நிலைநிற்குமென்பதில் ஐயமில்லை. எத்தனை குடும்பங்கள் நாசமாயின! எத்தனை வீடுகள் பாழாயின! இச்சமாதானம் நீடித்ததாகும்படிக்கும், சனங்கள் யுத்தப்பயிற்சிசெய்யாத காலஞ் சீக்கிரம்வரும்படிக்கும், தேவனுடைய இராச்சியம் ஸ்தாபிக்கப்படவும் அவருடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவதுபோலப் பூமியிலேயுஞ் செய்யப்படும்படிக்கும் நாம் வேண்டிமையுடன் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org